1153

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

ஸ்ரீ அஹோபிலமடம் 41வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீவண்சட
கோப ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ம சடகோபயதீந்த்ரமஹாதேசிகன்.

ஜய ௵
மார்கழி ௴

ஸம்புடம் 13.
ஸஞ்சிகை 12.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் — பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் — 374
2. ஸ்ரீஅழகியசிங்கரின் அருள்மொழிகள் — 377
[ஸ்ரீ. உப. பாதூர், தூப்புல், ராமபத்ராசார்ய ஸ்வாமி, சிரோமணி, ஸ்ரீஅஹோபிலமடம், திருவுள்ளூர்.] (ஸங்க்ரஹித்தவர்)
3. திருப்பாவைக்கதை — 381
[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம், திருமலைதாதாசார்யஸ்வாமி, M. O. L. திருப்பதி.]
4. கோதையும் கோவிந்தனும் — 385
[ஸ்ரீ. உப. வித்வான், வேளிய நல்லூர் வரதராஜ ஐயங்கார் ஸ்வாமி, வெம்பாக்கம்.]
5. ஸ்வதர்மம் — 387
[ஸ்ரீ. உப. ஒரகடம் கோ. ஸுதர்சநாசார்யஸ்வாமி, ரிடையர்ட் தமிழாசிரியர், அவளூர்.]
6. ஸரஸஸல்லாபம் — 389
[ஸ்ரீ. உப. கனபாடி ஸந்தானகோபாலாசார்யஸ்வாமி, ஹைதராபாத்.]
7. யதோக்தகாரி ஸ்தோத்ரம் — 391
[ஸ்ரீ. உப. வித்வான், வேளியநல்லூர், ஸ்ரீநிவாஸதாதாசார்யஸ்வாமி, காஞ்சீபுரம்.]
8. ஒரொன்றுதானே (3) — 393
[ஸ்ரீ. உப. திண்டுக்கல் ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, அட்வோகேட், சென்னை.]
9. செய்திகள் — 397
10. அடியேன் பெற்ற பாக்யம் — 400
[ஸ்ரீ. உப. அத்தி நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, சிரோமணி, அர்ச்சகர், ஸ்ரீவீரராகவஸ்வாமி தேவஸ்தானம், திருவுள்ளூர்.]
11. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் — 402

குறிப்பு:– அடுத்த ஸஞ்சிகையிலிருந்து புது ஸம்புடம் ஆரம்பமாகிறபடியால் சந்தாதாரர்கள் இவ்வருஷத்திய (1954) சந்தாபாக்கியையும், புது வருஷத்திய சந்தாக்களையும் அனுப்பிக்கொடுத்து உபகரிக்கப் பிரார்த்திக்கிறோம். விஷயதானம் செய்யும் ஸ்வாமிகளும் ஸரளமாயும், (ஸர்வஜனங்களுக்கும் புரியும்படியான எளிய நடையில்) அதிகவிஸ்தாரமில்லாமலும் உள்ள வ்யாஸங்களை அனுக்ரஹித்து நமது பத்ரிகையை வ்ருத்தி செய்யப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 13 } ஜய ௵ மார்கழி ௴ { ஸஞ்சிகை 12

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸ்ரீபகவத்ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமரான ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனை 'கவிதார்க்கிககேஸரீ' என்று நாமெல்லோரும் அறிவோம். அப்பேர்ப்பட்ட ஓர் மஹானே 'தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்ததெல்லாம் ஸாதிக்க வல்லராயிருக்கச்செய்தேயிறே நாம் ப்ரமாண சரணராய்ப் போருகிறது' என்றுரைப்பதால் தர்க்கமே ஸர்வோத்க்ருஷ்டமான ப்ரமாணமாக இருக்க முடியாதென்றும், வேத, ஆகமங்கள் தர்க்கத்தைக் காட்டிலும் உயர்ந்த ப்ரமாணங்களென்றும் கொள்ளவேண்டுமென்று கூறுவதாகக் கொள்ளவேண்டி வருகிறது. வேதங்கள் அநாதியாகியவைகளான படியாலும், பகவானிடமிருந்து உண்டானவைகளானதாலும் உத்க்ருஷ்டமானவைகளாகின்றன. ஸர்வோத்க்ருஷ்டமான வேதங்கள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவைகள். நம்பிக்கையையே முக்யமாகக் கொள்ளாமல் யுக்தியைமாத்திரம் அநுஸரிப்பதால் உண்மையை அறியமுடியாதென்று நாம் முன்னோர்களிடமிருந்து தெரிந்துகொள்வதுடன் அநுபவத்திலும் காணமுடியும். ஆகவே நாம் வேதங்களை அத்யயனம் செய்து அறிந்துகொள்ள வேண்டியவைகள் பல. வேதங்கள் உலகில் உள்ள எல்லோரும் கற்க அதிகாரமில்லாமையினால் மற்றவர்களுக்கு ப்ரமாணாந்தரங்கள் வேண்டி வந்தன. 'उदारचरितानान्तु वसुधैव कुटुम्बकं' என்று கவி பவபூதி உத்தர ராம சரிதத்தில் கூறியதுபோல் மஹான்கள் லோகக்ஷேமத்தையே நோக்கமாகக் கொண்டவர்கள். ஆதலால் வேதங்களின் கருத்துக்களையே ப்ரபந்தங்களாக நமக்கு நமது முன்னோர்கள் அருளியுள்ளார்கள். ஆழ்வார்கள் நமது ஸமூஹத்திற்குச் செய்த பேருபகாரம் இதுதான். வேதங்களில் உள்ள நம்பிக்கையே ஸ்வாமி ஸ்ரீதேசிகன் போன்றவர்களுக்கு ப்ரபந்தங்களிலும் உண்டு என்பதை நாம் நன்கு அறிகிறோம். '......தமிழ்மாலைகள் நாம் தெளியவோதித்தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே' என்பதால் வேதத்தின் உட்கருத்தை ஆழ்வார்கள் 'ஆய்ந்தெடுத்து'க் கூறினார்கள் என்பது தெளிவு. ஸ்வாமி ஸ்ரீதேசிகனுக்கு வேதத்தில் உள்ள நம்பிக்கையும் பஹுமானமும் ப்ரபந்தங்களிலும் உண்டு என்பது ஸ்ரீஸ்வாமியின் 'द्रमिडोपनिषत्सारं' என்ற க்ரந்தத்தினால் தெரியவருகிறது.

இவ்விதம் நமது தர்சனத்திற்கு முக்யமான திவ்யப்ரபந்தங்களுக்கு முக்ய கர்த்தாவானவர்கள் நம் 'தர்சனஸ்தாபகரான நம்பாழ்வாரே' யாவர். தர்சனஸ்தாபகரின் ப்ரபந்தங்கள் மறைந்துபோனவிடத்து அவைகளை அடைந்து நமக்கு உதவிய மஹான் ஸ்ரீமந்நாதமுனிகளே யாவர். ஸ்ரீமந்நாதமுனிகளை 'தாளம்வழங்கித் தமிழ்மறையின்னிசை தந்தவள்ளல்' என்றே ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் குறிப்பிட்டுள்ளார். ஆதலால் ஸ்ரீமந்நாதமுனிகளிடம் ஸ்ரீஸ்வாமிக்கு பரமபக்தி எனக்கூறலாம். இப்படி ஆழ்வார், ஆசார்யர்களின் க்ரந்தங்களையும், வாழ்க்கை வரலாறுகளையும் 'வாசித்தும், கேட்டும், வணங்கி வழிபட்டும், பூசித்தும்போக்கினேன் போது' என்பதுபோல் நமது வாழ்நாட்களைக் கழிக்கவேண்டும்.

நம் தர்சன ஸ்தாபகரான நம்மாழ்வாரைக் கொண்டாடும் உத்ஸவம் 'मासानां मार्गशीर्षोऽहं' என்று ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மா கூறுவதுபோல மார்கழிமாதத்திலேயே நடைபெறுகிறது. நம்

நாட்டில் உள்ள ஒவ்வொரு ஆலயத்திலும் இவ்வுத்ஸவம் கொண்டாடப்படுவதை நாம் நன்கு அறிவோம். இப்பேர்ப்பட்ட உத்ஸவத்தில் ப்ரபந்தங்களை நமக்கு அருளி உதவிய ஆழ்வார்களைக் கொண்டாட வேண்டுமென்பது உசிதமே. அதேபோல, அல்லது அதைவிட முக்கியமாக, இழந்த ப்ரபந்தங்களை நமக்குத்தேடிக் கொடுத்த ஸ்ரீமந்நாதமுனிகளையும், ப்ரபந்தங்களின் பெருமையை நமக்கு பலவிதங்களிலும் உபதேசித்தருளிய ஸ்வாமி ஸ்ரீதேசிகனையும் விசேஷமாகக் கொண்டாடவேண்டியது மிகவுமவச்யமல்லவா. ஜ்ஞாநமற்றவனுக்கு ஜ்ஞாநத்தைப் புகட்டுபவர்தானே ஆசார்யர். ஜ்ஞாநத்தைப் புகட்டுபவர் தகப்பனார் ஸ்தானத்தையுமல்லவா அடைகிறார். ஆதலால் ஜ்ஞாநபிதாவான ஸ்ரீமந்நாதமுனிகளும், ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனும் அத்யயனோத்ஸவத்தில் ப்ரதான ஸ்தானங்களில் பூஜிக்கத்தகுந்தவர்களல்லவா? இக்கருத்தைத்தானே ஸ்வாமி ஸ்ரீதேசிகன் நமக்குத் தெளிவாக '**अध्यासीनतुरङ्गवक्त्रविलसज्जिह्वाग्रसिंहासनादाचार्यादिह देवतां समधिकामन्यां न मन्यामहे**' என்று எடுத்துரைத்தார். இக்கருத்துக்களை மனத்திற் கொண்டே நாம் உத்ஸவ காலங்களில் ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தஸ்தாபகர்களான ஆழ்வார்களுக்கும், பூர்வாசார்யர்களுக்கும் பஹுமான ஸ்தானங்களைக் கொடுத்து நமது கொண்டாட்டங்களை சிறப்புறும்படியும், அதன் மூலமாகவே நாமும் க்ருதார்த்தர்களாக ஆகவேண்டுமென்பதும் நமது ப்ரார்த்தனை.

* * * * * * *

'**देवमिवाचार्यमुपासीत**' என்றபடி பகவானைப் போலவே ஆசார்யர்களைப் பூஜிக்க வேண்டும். ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்யோபய வேதாந்தாசார்யேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீமதழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் சேலத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. சென்ற வருஷம் திருவள்ளூரிலிருந்து பட்டாபிஷேகாநந்தரம் விஜயயாத்ரையாக ஸஞ்சாரம் புறப்பட்டு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் எந்தெந்த விடங்களுக்கெல்லாமெழுந்தருளினாரோ அவ்விடங்களிலெல்லாமிருந்து பல சிஷ்யர்கள் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்திற்கு வந்து கண்டு களித்து ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஸேவித்து க்ருதார்த்தர்களாக ஆனதுடன், ஸ்ரீமதழகியசிங்கரின் பரிபூர்ணாநுக்ரஹத்தையும் அடைந்தார்கள். பல விடங்களிலுள்ள சிஷ்யர்களும், இதரபக்தர்களும் ஒன்று கூடி பரம பக்தியுடன் நமது ஆசார்ய ச்ரேஷ்டரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை உத்ஸாஹமாகக் கொண்டாடினார்களென்பது நமது ஸம்ப்ரதாயத்திற்கு ஓர் நல்ல காலம் ஏற்பட்டிருப்பதின் அடையாளமல்லவா!

ஸ்ரீமதஹோபிலமடத்தின் ஆதிபத்யத்தை வஹித்துவரும் ஸ்ரீமதழகியசிங்கர்களில் ஒருவரான ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதிவிசேஷண விசிஷ்டராயெழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீசடகோபராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகனின் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவமும் ஒன்றுசேரவே இவ்வுத்ஸவத்திற்கு ஓர் தனிச் சிறப்பு ஏற்பட்டிருக்கிறது. திருநக்ஷத்ரமஹோத்ஸவம் ஓர் மஹோத்ஸவமென்பதுமட்டும் இல்லாமல் ஓர் வைதிக மஹோத்ஸவமாகவிருந்தது. அதாவது விடியற்காலையில் விச்வரூப ஸேவை முதல் வேத, ப்ரபந்த, க்ரந்தபாராயணங்களும் திருவாராதனமும் ஓர் புனிதமான சூழ்நிலையை ஏற்படுத்தின. இச்சூழ்நிலையில் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸன்னிதியில் கூடியிருந்த ஒவ்வொருவரும் தங்களை மறந்து முக்தர்களாகவே மாறியிருந்தார்கள். திருவாராதனம் முடிந்து சாற்றுமுறை முடியும் வரை இவ்வுலகையே மறந்து ஆநந்த வெள்ளத்தில் மூழ்கி யிருந்தார்களென்பதில் ஐயமில்லை. அதுஸமயம் '**वैकुण्ठवासेऽपि न मेऽभिलाषः**' என்றுதான் ஒவ்வொருவரும் எண்ணியிருப்பார்கள். இம்மாதிரியான ஓர் அத்ருஷ்டத்தை நமக்கு அநுக்ரஹித்தருளும் நம் ஆசார்ய ச்ரேஷ்டருக்கு கைமாறு 'மாயனும் காணகில்லான்' என்பதில் என்ன ஸந்தேஹம் இருக்கமுடியும். இதுவே நமது பாக்யம். இம்மாதிரியான ஓர் சூழ்நிலையை, ஸ்ரீவைகுண்டவாஸம் போன்ற ஓர் ஆநந்தத்தை நமது ஸமூஹத்தில் உள்ள எல்லோரும் அடையவேண்டும் என்ற பரமோதார குணத்

துடன் ஸ்ரீமத்அழகியசிங்கர் மாலோலனுடன் நமது நாட்டில் ஸஞ்சாரங்கள் செய்துகொண்டு ஆழ்வார் எம்பெருமானை அநுஸந்திப்பது போலவே 'பல்லாண்டு பல்லாண்டு' எழுந்தருளியிருந்து நம்மை அநுக்ரஹித்தருளவேண்டுமென்பதே நமது ப்ரார்த்தனை.

*   *   *   *   *   *   *

ஸ்ரீமதழகிய சிங்கரால் பரந்த நோக்கத்துடன் நமது வைதிக ஸமூஹாபிவ்ருத்திக்காக ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ அஹோபில மடம் பாடசாலைகளில் (மதுராந்தகம், மாம்பலம், காஞ்சிபுரம், உத்திரமேரூர், பாதூர், வடுவூர், திருக்குடந்தை, ஸ்ரீரங்கம்) ஸ்ரீமதழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டிருக்கின்றது. வீதி உத்ஸவங்களும், வித்யார்த்திகளின் பெற்றோர்கள், ஆஸ்திகர்கள் முதலியவர்களுடைய உபந்யாஸங்களும், பகவத்ப்ரஸாத விநியோகங்களும் வெகு நேர்த்தியான ஏற்பாடுகளுடன் நடந்தேறின. மேற்கூறிய விடங்களிலும் இதர விடங்களிலுமுள்ள நமது ஸமூஹத்தினர் நம் ஸம்ப்ரதாயப் பெருமையையும், அதன் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் நமது ஆசார்யோத்தமரின் திவ்ய கல்யாண குணங்களையும் நன்கு உணர்ந்து அவைகளில் முழுமனத்துடனீடுபட்டு மேன்மேலும் அபிவ்ருத்தி யடைவார்கள் என்பதில் ஸந்தேஹமில்லை. தர்ம ஸ்தாபனத்திற்காக யுகந்தோறும் அவதாரம் எடுக்கும் பகவானே இம்மாதிரியான உருவங்களில் தோன்றி நம்மை அநுக்ரஹித்தருளுவதினால் நாம் அதற்கநுகுணமாகநடந்துகொண்டு நற்கதியை அடையவேண்டும் என்பதே நமது அவா.

ஸ்ரீ:

திருமங்கை மன்னன் திருநக்ஷத்ரமஹோத்ஸவம், ஸ்ரீரங்கம்.

ஜய வருஷம் கார்த்திகை மாதம் 19௳ (4–12–54) சனிக்கிழமை ஸ்ரீதசாவதாரன் ஸன்னிதியில் கலியனின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் உபக்ரமிக்கப்பட்டது. 8–12–54 புதன் கிழமை சாற்றுமுறையன்று ஆழ்வார் நான்கு வீதிகளிலும் புறப்பாடு கண்டருளினர். பிறகு ஸேவை சாற்றுமுறைகள் நன்றாக நடந்தன.

இந்தத் திருநக்ஷத்ரத்தை முன்னிட்டு 12–12–54 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு உத்திரவீதி ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான், தேசிகதர்சன விஜயத்வஜ, ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி "நம் தேசக்ஷேமம்" என்பதுபற்றி மிகவும் அழகாக உபந்யாஸம் செய்தருளினர்.

10–12–54 வெள்ளிக்கிழமை மாலையில் ஸுமார் 4 மணிக்கு ஸ்ரீதசாவதாரன் ஸன்னிதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீலக்ஷ்மீநாராயணன் புறப்பாடாகி சுடர் (சொக்கப்பானை) ஆகி ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி சாற்றுமுறை கோஷ்டி நடந்தது.

ஸ்ரீதசாவதார எம்பெருமான்களுக்கு உள்ளூர் தங்கம்மாளால் 11–12–54 சனிக்கிழமை முதல் லக்ஷார்ச்சனை பண்ணிவிக்கப்பட்டு 15–12–54 புதன்கிழமை பூர்த்தியடைந்தது.

அ. நரஸிம்ஹ ஐயங்கார்,
ஸ்ரீ அஹோபிலமடம் கௌரவ மானேஜர்.

ஸ்ரீ:

*ஸ்ரீ அழகியசிங்கரின் அருள்மொழிகள்.

"ப்ராசீன ஆசார நியமங்களின் ஆவச்யகதை"

நமது நலனைக் கருதி நம் முன்னோர்கள் சில சட்டதிட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். உலகில் நியாயம், ஒழுங்கு, அமைதி இவைகளுக்கென்று அரசாங்கத்தில் சில சட்டங்களை ஏற்படுத்தி, மக்கள் இதன்படி அடங்கி நடக்க வேண்டுமென்றும் மீறினால் தண்டனை உண்டென்றும் வ்யவஸ்தை இருப்பதுபோல், வேத ஶாஸ்த்ரங்களிலும் சட்டங்களும், மீறுபவர்களுக்குத் தண்டனைகளும் வ்யவஸ்திதங்களாய் உள்ளன. வைதிகம் லௌகிகம் என்ற பிரிவு நாமாக ஏற்படுத்தியவையாகும். இரண்டையும் வேறாகப் பிரிக்க முடியாது. இதை மஹா பாஷ்யகாரர் 'யே இமே வைதிகாஸ்தே ஏவ லௌகிகா:; யே ச லௌகிகாஸ்தே ஏவ வைதிகா:' என்று வைதிகலௌகிகங்களில் மாறுதல் இல்லாமையைக் கூறியுள்ளார். உலகில் சட்டப்படி நடக்காதவனுக்கு தண்டனைபோல் வேதம் விதித்தபடி நடவாதவனுக்குப் பாபமூலகமாய் துக்கங்கள் உண்டாகின்றன. சட்டப்படி நடப்பவனுக்கு அநுகூலமுண்டாவதுபோல வேதம் விதித்தபடி நடப்பவனுக்கு புண்யமுண்டாகி அதனால் நன்மையுண்டாகிறது. எவ்வித கர்மாவுக்கும் பலன் உண்டு. ஆனால் கர்மாவே பலனளிப்பதாகக் கூறுவது ஸரியல்ல. ஒரு வேலை செய்பவன் தனது உழைப்பினால் தனது யஜமானனுடைய ப்ரீதிக்கு விஷயமாகி பலத்தை அதாவது கூலியை அடைகிறான். அதுபோல நாம் செய்யும் ஒவ்வொரு கர்மாவிற்கும் பலன் கொடுப்பவன் ஸர்வேச்வரனாகும். இதைப் 'பலமத உபபத்தே:' என்று ஸூத்ரகாரர் கூறியிருக்கிறார். இதன் பொருள்:- அத:- ஸர்வஜ்ஞனாயும், ஸர்வஶக்தனாயும், ஸத்யஸங்கல்பனாயுமுள்ள பகவானாலேயே, பலம்- ஐஹிகாமுஷ்மிகங்களான ஸகல பலங்களும் உண்டாகின்றன. (இதற்குக் காரணத்தைச் சொல்லுகிறார்) உபபத்தே:- ஸர்வஜ்ஞத்வாதிகுணங்களையுடைய அவனுக்கே பலத்தைக் கொடுக்கும் ஶக்தி இருப்பதால், என்று. ஸ்ரீ பாஷ்யகாரர், ஸர்வஜ்ஞத்வாதிகுணங்களையுடைய பகவானுக்கு ப்ரீதியுண்டாகவே நாம் ஒவ்வொரு கர்மாவையும் செய்யவேண்டும்; அவனே ஸகலகர்மாக்களுக்கும் பலத்தைக் கொடுப்பவன்; ஸர்வஜ்ஞனாயிருக்கையால் நாம் செய்யும் புண்ணிய பாபங்களைக் கண்டறியவல்லவனவன். ஸர்வஶக்தனாயிருக்கையால் கர்மாநுகுணமாக ஸுகதுக்காநுபவரூபமான பலத்தைக் கொடுப்பவனும் அவனே; ஸத்யஸங்கல்பனாயிருக்கையால் அவரவர்களது புண்ணியபாபங்களுக்கேற்றபடி ரக்ஷணசிக்ஷணங்களைச் செய்தே தீருவான் என்றும் தகுந்த காரணங்களைக்கொண்டு நிர்ணயித்துள்ளார். ஏதோ அரூபஶக்தி பலனைத்தருகிறதென்று கூறுவதைவிட சைதன்யஶக்தியான பகவான் தருகிறான் என்பதே வேதாந்திகள் கண்ட முடிவாகும். வைதிககர்மாக்கள் (யாகாதிகள்) மறு ஜந்மத்தில் பலனைத் தருகிறது என்பது நம் நம்பிக்கை. சில கர்மாக்களுக்கு பலன் உடனேயே ஏற்படலாம். இதைத்தான் புண்ணிய பாபங்கள் என்று பாகுபாடு செய்து நடந்து வருகிறோம்.

'ச்ருதிஸ்ம்ருதிகள் என்னுடைய ஆஜ்ஞைகள் அதாவது சட்டங்கள். இவைகளை யார் மீறி நடக்கிறார்களோ, அவர்கள் என்ப்ரீதிக்கு விஷயமாகாமல் நிக்ரஹிக்கப்படுகிறார்கள்' என்று பகவானே அருளிச்செய்திருக்கிறார். ச்ருதிஸ்ம்ருதிகளில் வர்ணாச்ரமவிபாகம் செய்து அவரவர்களுக்கும் தனித்தனி தர்மங்களையும் ஸப்ஸ்

$ இது ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரால் 1-12-54 அன்று சேலத்திலுள்ள சிஷ்யர்களின் ப்ரார்த்தனைக்கிணங்க, சேலம், அட்வொகேட், ஸ்ரீ. உப. கே. ஸ்ரீநிவாஸராகவய்யங்காருடைய பங்களாவிலருளிச்செய்த உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

காரங்களையும் வகுத்துள்ளனர். இவைகளின் படி நடத்தலே பகவானுடைய ஆஜ்ஞைப்படி நடத்தல். அதனாலேயே பகவத்ப்ரீதியை யடைந்து ஸுகத்தையடைய முடியும். இதை யனைவரும் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆத்மா ஸம்பந்தப்பட்டவரையில் எல்லோரும் ஸமம் என்று ஏற்பட்டாலும் வேற்றுமையும் இயற்கையாகவே ஏற்படுகிறது. ஒற்றுமைக்கும் ஸமத்வத்திற்கும் சட்டங்களைச் செய்வதென்றாலும் ஸாத்யமில்லை. ஜாதியை ஒழித்தால் தான் தேசம் ஒற்றுமைப்படும் என்று தவறான ப்ரசாரம் செய்யப்பட்டு வருகிறது. சில விஷயங்களில்தான் ஒற்றுமை ஸாத்யமாகும். தேசப்பாதுகாப்பு, பொருளாதாரம், அரசாங்கபரிபாலனம் முதலியவற்றில் ஒற்றுமை அவசியந்தான். ஆனால் மற்ற வழிகளில் வித்தியாஸத்தை ஒழித்தால்தான் ஒற்றுமை ஏற்படும் என்பது அநுபவத்திலேயே ஸாத்யமில்லை என்பது தெரியவரும். ஒரே வகுப்பினர் நடத்தும் ராஜ்யங்களில் வேற்றுமைகளும் சச்சரவுகளேற்படுவதையும், ஒரே அரசியல் கட்சியினருக்குள்ளேயே சண்டைகள் மலிந்து நிர்வாஹமே ஸ்தம்பித்து விடுவதையும் நாம் நேரிடையாக இன்று பார்க்கவில்லையா? ஒற்றுமைக்கு ஜாதி வகுப்புப் பிரிவினை தான் காரணமென்று கூறுவதில் அர்த்தமேயில்லை. பல வேறு காரணங்களே ஒற்றுமையைக் குலைக்கின்றன என்பது தெளிவு.

சிலர் 'வர்ணாச்ரமாதி விபாகங்கள் கூடாதென்றும் எல்லோரும் ஸாம்யபுத்தியுடன் நடக்க வேண்டுமென்றும் கூறி 'ஶுநி சைவ ச்வபாகே ச பண்டிதாஸ் ஸமதர்சின:' என்று கீதையில் பகவான் கூறியிருப்பதால் பேதம் கூடாதென்பது பகவான் கருத்து; பேதம் காட்டுவது கூடா'தென்று சொல்லிவருகிறார்கள். இதை விளங்கவைக்கவேண்டியதவசியம். இதற்கு ஓர் உதாஹரணம் கூறுகிறேன். ஒரு பெரிய குடும்பத்தில் மூத்த பிள்ளைக்குக் கல்யாணம் நடக்கிறது. புதிதாக வந்த நாட்டுப் பெண்ணின் தகப்பனார் 'இவளிடம் எல்லோரும் அன்புடன் நடந்து வாருங்கள்' என்று கூறுகிறார். அப்போது வந்த மருமகளிடம் மாமனார் மாமியார் காட்டும் அன்பு ஒருவகைப்பட்டது. அன்பாயிருந்தாலும் மாமனார்- நாட்டுப்பெண் என்ற ரீதியில் ஒருவித கட்டுப்பட்டுக்குட்பட்டது; கணவன் காட்டும் அன்பு பதி-பத்நீரூபமாக வேறுபட்டதாகும்; மைத்துனன், நாத்தனார்கள் காட்டும் அன்பு தோழமை போன்றதாக வேறுபட்டிருக்கும். அன்பாயிருத்தல் என்பதற்குப் புருஷன்–மனைவி யிருப்பது போல் ப்ரேமையாயிருத்தல் என்று கருதி அம்மாதிரி ப்ரேமையை எல்லோரும் காட்ட முன்வந்தால் விபரீதமாகி ஒழுக்கம் தவறிவிடும். அது எப்படி தகாததோ அப்படியே ஸமதர்சனமென்பதும். வித்யாவிநயஸம்பந்நனான ப்ராஹ்மணனிடத்திலும், பசுவினிடத்திலும், யானையினிடமும், நாயிடத்திலும், சண்டாளனிடத்திலும் பண்டிதர்கள் ஸமநோக்குள்ளவர்கள்' என்ற வாக்கியத்தை இவர்கள் கூறும் ஸமநோக்காகக் கொண்டால், தனக்கு மேம்பட்டவர்களை ஸ்வாகதம் பண்ணி உபசரித்து ஆஸநாதிகளைக் கொடுத்து ஸந்மானங்களைச் செய்வதுபோல, நாய்க்கும் அம்மாதிரி உபசாராதிகளைச் செய்ய வேண்டி வரும். அம்மாதிரி யாராவது செய்வாருண்டா? முன் நான் சொன்ன த்ருஷ்டாந்தம் மனதில் பதிந்தால் இம்மாதிரி வீண் வாதத்திற்கிடமில்லை.

மற்ற தேசங்களை விட நம் பாரததேசத்திற்கு மிகவும் ஏற்றமுண்டு. நமது பண்பாடுகளும் கலாசாரங்களும் மற்ற நாட்டினருடையவற்றைக் காட்டிலும் புனிதத்தன்மை வாய்ந்தவை. ஹிந்துக்களுடைய கலாசாரங்களில் முக்கியமானது சிகையுடனிருப்பது. இதை ப்ராசீனர்களிடமிருந்து அறியலாம். சுமார் 50 வருடங்களாக இதர நாட்டினருடைய ஆட்சியாலும் பழக்கவழக்கங்களாலும் சிகை மாற்றம் ஏற்பட்டுள்ளது. முக்கியமாக ப்ராஹ்மணர்களுக்கு 'சௌள' மென்பதாக ஓர் முக்ய ஸம்ஸ்காரமாக சிகை வைக்கப்படுவது விதிக்கப்பட்டுள்ளது. இது மந்த்ரங்களைச் சொல்லி செய்யப்படுகிறது. உபநயனம் எவ்வளவு முக்யமான ஸம்ஸ்காரமோ அவ்வளவு முக்யமானது சௌளகர்மாவும். இப்படி மந்த்ரபூர்வகமாகச் செய்யப்படும் ஸம்ஸ்காரத்தை எடுத்துவிடுவது

மிக வெறுக்கத்தக்கதாகும். உபநயனம் செய்து தரிக்கப்படும் பூணூல் இல்லாமலிருப்பது எவ்வாறு ப்ராஹ்மணனுக்குத் தகாததோ, அவ்வாறே சிகையில்லாமலிருப்பதும் கூடாததாகும். இதைத் தெரிந்தோ தெரியாமலோ சிலர் ஏமாந்து பிறரது நாகரிகத்தில் மூழ்கிப் போய் சிகையின்றி இருந்து வருகிறார்கள். இவைகள் முதலில் கூறியபடி பகவானுடைய ஆஜ்ஞையாகிற சட்டத்தை மீறும் செயல்கள் ஆகும். நமது தேசம் அடிமைப்பட்டிருந்த காலத்தில், அஸ்வதந்த்ரர்களாக இருந்ததால் அப்போதிருந்த சூழ்நிலைகளுக்கேற்ப சிலர் மாறியிருந்தாலும், தேசம் ஸ்வதந்த்ரமடைந்து ராஜ்யநிர்வாஹம் நம்முடையதாக இருக்கும் இக்காலத்தில், நடுவில் மாறியிருந்த கலாசாரங்களையும் பண்பாடுகளையும் மாற்றி ச்ருதி ஸ்ம்ருதிகளாகிற - பகவதாஜ்ஞையாகிற சட்டங்கள் சொல்லும் வழக்கப்படி நடந்துவர முயலவேண்டும். அதுதான் நாம் ஸ்வதந்த்ரமடைந்ததற்கு எடுத்துக் காட்டாகும். பழக்கவழக்கங்களில் பிறருடைய அடிமைகளாக இருந்துகொண்டே நாம் ஸ்வதந்த்ரர்கள் என்று சொல்வது அர்த்தமற்றதாகும்.

தேசபக்தி என்றால் ஒரு பூகோள அமைப்பைக் கொண்டு மட்டும் அளவிட முடியாது. நம் பாரதவர்ஷமே தர்மத்தின் அடிப்படையில் ஆசாரத்தை முற்கொண்டு தொன்று தொட்ட காலமாய் மேன்மையுற்று வந்துள்ளதுடன் அவ்வப்பொழுது ஏற்பட்டுள்ள தாக்குதல்களையும் தீயசக்திகளையும் எதிர்த்துப் போராடி நம் தேசமும் ஸதாசாரமும் நிலைத்துவந்துள்ளன. அவரவர்கள் மதத்தைப் பற்றுதலுடன் அனுஷ்டிப்பது தான் எல்லோருக்கும் நன்மையை உண்டுபண்ணக் கூடியது. இதரர்களுடைய மதம் ஸரியா, தவறா என்பதைப்பற்றி நாம் கவலைப்படக்கூடாது. அதில் தலையிடுவதும் அவசியமில்லை. மதங்களின் பரஸ்பரகண்டனத்தில் இறங்குவதால் கக்ஷிக்குரோதம் அதிகரிக்கின்றதேயல்லது உண்மையான மதப்பற்று வளருவதாக நினைக்கலாகாது. நல்லது கெட்டதென்பதை நாமாகவே ஶாஸ்த்ரஜ்ஞாநத்தினால் அறிவது கடினம்; மதிமயக்கத்தைத் தரும். பெரியோர்களது உபதேசத்தினாலும் ஆசாரத்தினாலும் ஹரியை (ஸர்வவித பாபங்களையும் அபஹரிப்பவனை) அறிந்து ஸர்வ கர்மங்களிலும் விரமிக்கவும் என்பதை,

'ஶாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேஶம் புத்தே:
சலநகாரணம் । உபதேஶாத் ஹரிம் புத்வா
விரமேத் ஸர்வகர்மஸு ॥'

என்று பெரியோர்கள் உபதேசித்துள்ளனர். நாம் நமது தர்மத்தில் நம்பிக்கையும் பற்றுதலும் காண்பித்தால் தான் பிற மதத்தினர் நம்மை மதித்து கௌரவிப்பார்கள். நாம் வீணாக அந்நிய பழக்கவழக்கங்களையும் ஆசாரங்களையும் பின்பற்றாமல் நமது தர்மங்களிலும் ஆசாரநியமங்களிலும் நம்பிக்கைவைத்துப் பின்பற்றி நடக்கவேண்டும்.

நாம் அரசியலில் ப்ரவேசிப்பதில்லையானாலும், நம் ஆசார தர்ம விஷயங்களில் அன்னிய ராட்சியில் கூட செய்யக்கூடாத விஷயங்களில் (விவாஹவயது முதலியவற்றில்) நமது தேசிய சர்க்கார் குறுக்கிடுவது வருந்தத்தக்கதாகும். நாம் நமது தர்மம் ஆசாரம் இவைகளைப் பின்பற்றுவதில் ஊக்கம் தளராமல் ஸ்திரபுத்தியுடன் நமது தர்மத்தை ரக்ஷிக்கப் பாடுபடவேண்டியதுடன் நமது வருங்கால ஸந்ததிகளை நல்ல மார்க்கத்தில் செல்லுமாறு பயிலுவிப்பது கடமையாகிறது.

ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரும் நமது ப்ராசீனர்கள் ஏற்படுத்தியுள்ள ஆசாரநியமங்களனைத்தும் பகவதாஜ்ஞையாகிற வேதஶாஸ்த்ரஸித்தங்களாதலால், அவைகளின்படி நடந்தால் ஸ்ரீமந்நாராயணனுடைய ப்ரீதிக்கு பாத்ரமாகி அவனது இன்னருளைப்பெறுவது திண்ணம். உங்களது ஸந்ததிகளையும் சிறு வயதிலிருந்தே நமது ப்ராசீநவேஷபாஷணங்களிலும் ஆசாரங்களிலும்பற்றுள்ளவர்களாகச்செய்தும் வந்தால் அதன்மூலம் ஸந்துஷ்டனான ஶ்ரீமந்நாராயணன் உங்களுக்கு ஸகல க்ஷேமங்களையும் தந்து அனைவரையும் ரக்ஷிப்பான்.

தந்தி : "பத்மா" ஸ்தாபிதம் 1916 போன் நெ. 219

கல்யாண காலத்தை முன்னிட்டு
மிகவும் குறைந்த
ஒரே விலை விற்பனை

—●—

கண்ணைக் கவரும் பார்டர்களில் எல்லாவிதமான

பட்டு அண்டு **நூல்**

ஜவுளிகள் மிகவும் சிறந்த
நாகரீகமான வகையில்
ஸ்டாக் செய்துள்ளோம்.

கோபால பத்ம விலாஸ்

இப்பொதே எங்கள் கடைக்கு
நேரில் விஜயம் செய்து வாங்கி
திருப்தி அடைய கோருகிறோம்

—

புரோப்ரைட்டர்ஸ்:

S. N. பத்மநாப செட்டியார்,
P. R. ஜெயகோபால் செட்டியார்,
S. P. ராமநாதன்,

385. பஜார் வீதி, சேலம்.

P. B. No. 21

ஸ்ரீ:

திருப்பாவைக்கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

எம்பெருமானுடைய மற்ற குணங்கள்போலே சக்தியும் அளவற்றது. எவ்வளவு பலமுள்ள அஸுரனும் அவனுக்கு முன் யானைக்கு முன் கொசு போன்றவனுவான். பெருங்காற்றுக்கு ஒரு சிறு துரும்பு போல் ஆவான். ஆகையால் அவனை நினைத்த உடனேயே சத்ருக்களான அஸுரர்களெல்லாம் கம்ஸன்போலே வெப்பம் அதாவது தாபம் கொள்வார்கள். தவிப்பார்கள். இப்படித் தனது அபாரசக்தியினுல் பகைவர்களுக்கு மிகுந்த தாபத்தைக் கொடுக்கின்ருன் ஸர்வேச்வரன். தாபமடைந்த சத்ருக்கள் சரணுகதி பண்ணி 'இனி நாங்கள் இப்படி அபசாரப்பட மாட்டோம்; இப்போது க்ஷமிக்கவேண்டும், ரக்ஷித்தருள வேண்டும்' என்று ப்ரார்த்தித்தார்களாகில் அவர்களுடைய குற்றத்தைப் பொறுத்து விடுவான். அவ்வாறன்றி யுத்தத்திற்கு வந்தார்களாகில் சக்ராயுதமெடுத்து வதம் செய்து விடுவான். இப்படி ஏதோ ஒருவிதத்தில் சத்ருக்களை அடக்கியபிறகு 'நம்மைச்சார்ந்த தேவர்கள் கஷ்டப்படுகின்ருர்களே' என்று அவன் மனத்திலிருந்த ஆயாஸமாகிற மலம் நீங்கி அவன் விமலனுவான். மேலும் சத்ருக்களை வதம் செய்வது அவனுக்குப் பாபமாகாது. அது அவனிடத்தில் ஒட்டாது. அவரவர்களுடைய புண்ய பாபங்களுக்குத்தக்கபடி நல்லதையோ கெட்டதையோ அவன் செய்கின்ருனுகையால் இச்செய்கையினுல் அவனுக்கேற்றமோ தாழ்வோ உண்டாவதில்லை. அதனுல் அவன் எப்பொழுதும் விமலனே. ஆகவே இதை யெல்லாம் சொல்லிக்கூப்பிட்டு 'தூக்கத்தை விட்டு எழுந்திரு. பிராட்டி வந்து கதவைத் திறக்கும்படி அருள்' என்ருள்.

இப்படிப் பல தடவை எழுப்பினபடியால் எம்பெருமான் விழித்துக்கொண்டிருக்கலாமென்றும் ஒருஸமயம் விழித்துக்கொள்ளாமலிருந்தாலும் பிராட்டியை எழுப்பினேமாகில் அந்த சப்தத்தினுலேயே அவனும் எழுந்துவிடுவான் என்றும் எண்ணிய நாயகப்பெண் பிறகு பிராட்டியை எழுப்பப்புகுந்தாள். அப்போது என்னென்று சொல்லிப் பிராட்டியை அழைப்பது என்கிற ஆலோசனை உண்டாயிற்று. நமக்குள்ள அநிஷ்டங்களைப் போக்கி இஷ்டங்களைக் கொடுக்கின்ருன் அவன் என்பதாலும், முடிவாக நாம் போயடையவேண்டியவன் அவனே என்பதாலும் எம்பெருமானை நாம் பஜிக்கின்ருேம். இப்படி அவன் நமக்குச்செய்யும் அநுக்ரஹங்களுக்கெல்லாம் காரணம் அவனுடைய ஜ்ஞாந சக்த்யாதி குணங்களாகையால் அவற்றைக் கீர்த்தநம் செய்து அநுபவித்து மகிழ்கின்ருேம். இனி இக்குணங்களில் மிகச் சிறந்தது, உத்தமோத்தமமானது எது என்று பார்த்தால் கருணை என்கிற தயைதான் அது, வேறென்றுமன்று என்பது தேறுகின்றது.

'वृषगिरिगृहमेधिगुणाबोधबलैश्वर्यवीर्यशक्तिमुखाः ।
दोषा भवेयुरेते यदि नाम दये त्वया विनाभूताः ॥'

என்று தயையோடு சேராதபோது ஜ்ஞானம், சக்தி முதலிய மற்ற எம்பெருமானுடைய குணங்களெல்லாம் தோஷங்களாகவே ஆகிவிடுமென்றருளிச்செய்திருக்கின்றனர். ஆகவே தயை என்று சொன்னதினுலேயே அதன் பெருமை விளங்கிவிடும். வேறென்றைக்கொண்டு அதன் சிறப்பை விளக்கவேண்டிய அவச்யமில்லை. இத்தகைய தயையின் வடிவே பிராட்டி. அதனுல் பிராட்டியின் ஸ்வரூபத்தை உள்ளபடி அநுஸந்தானம் செய்வது தவிர மற்று எதைப் பற்றியும் பேசவேண்டிய அவச்யமில்லை யென்று நாயகப்பெண் கருதினுள். அதன்படியே பிராட்டியின் உருவத்தை த்யானம் செய்து த்யானித்தபடியே வர்ணித்துப் பேசி எழுப்பினுள்:

செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல் நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்

என்று. செப்பு— கலசம். அதுபோன்றதும் ஆனுல் அதுபோல் முறடாயிராமல் மெதுவாயிருக்கின்றதுமான ஸ்தநங்களை உடையவள். கோவைப்பழம்போல் சிவந்த வாயை யுடையவள். சிறுத்த இடையை யுடையவள். 'இப்படி உத்தம லக்ஷணங்கள் அமைந்து அதனுல் ஸ்த்ரீகளுக்கெல்லாம் உத்தமையாக விளங்கும் நப்பின்னைப்பிராட்டியே' என்று கூப்பிட்டாள். எம்பெருமான் ஆலிங்கனம் பண்ணுவர். அப்போது முதலில் எம்பெருமானுடைய ஸ்பர்

சத்தைப் பெறுவது ஸ்தனம். பிறகு முத்தம் கொடுப்பதும் அதரபானமும் நடக்கும். அதன் பிறகு திருக்கைகள் மெதுவாக ஒட்டியாணத்தைத் தொடும் இந்த முறையில் இங்கு அவயவங்கள் வர்ணிக்கப்பட்டன.

இவ்விதம் கரை புரண்ட பக்தியோடு வர்ணித்துப் பிராட்டியை எழுப்பிய நாயகப்பெண் 'இவ்வித வர்ணநங்களுக்கெல்லாம் உரியவளும் பொருத்தமானவளும் பெரியபிராட்டியேயன்றோ. அறியாப்பெண்கள் நம்விஷயத்தில் இவ்வாறு பேசுகின்றனவே' என்று எண்ணி நப்பின்னைப் பிராட்டி ஸங்கோசப் படக்கூடுமென்று பார்த்து மேலும் 'திருவே' என்றாள். 'உங்களுக்குள் சிறியவள் பெரியவள் என்ற வேற்றுமை இருக்கலாயோ என்னவோ. எங்களுக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. தெரிந்துகொள்ளவேண்டிய அவச்யமுமில்லை. நீயும் பெரிய பிராட்டியும் ஒன்று என்றுதான் எங்கள் கருத்து. ஆகையால் துயிலெழாய். எழுந்து வந்து செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப மணிக்கதவும் தாள் திறவாய்' என்று விண்ணப்பம் செய்து வேண்டினாள்.

பிராட்டி விழித்துக்கொண்டாள். பெண்கள் வந்திருப்பதையும் அவர்கள் தங்களை எழுப்புவதையும் அறிந்தாள். எம்பெருமான் தனது இடப்பக்கத்தையும், பிராட்டி தனது வலப்பக்கத்தையும் மெத்தையின்மேல் வைத்தும், ஒருவர்க்கொருவர் பார்க்கும் வண்ணம் சிரஸ்ஸைத் தலையணைமேல் வைத்தும் எம்பெருமான் தனது வலது புஜத்தைப் பிராட்டியின் மேலும், பிராட்டி தனது இடது புஜத்தை எம்பெருமான் மேலும் போட்டு ஆச்லேஷம் பண்ணியும் சயனித்திருந்தார்கள். பிராட்டி விழித்துக்கொண்டதும் எம்பெருமானுக்கு நித்ராபங்கம் சிறிதும் உண்டாகாதபடி வெகு ஜாக்ரதையாக எம்பெருமான் மீதிருந்த தனது புஜத்தை எடுத்துவிட்டு அப்படியே மெதுவாகத் தன்மீதிருந்த எம்பெருமானுடைய புஜத்தை எடுத்துத் தூக்கிப் பிடித்துக்கொண்டே பின்னால் நகர்ந்து மற்றொரு கையால் மெத்தையின் ஓரத்திலிருந்த கைத் தலையணையை எடுத்து வைத்து அதன்மேல் அப்புஜத்தை அமர்த்தி விட்டுக் கட்டிலிலிருந்து கீழிறங்கி வஸ்த்ரம், ஆபரணம், கூந்தல் இவற்றையெல்லாம் ஸரிப்படுத்திக்கொண்டு எம்பெருமானுடைய திருமுகமண்டலத்தையும் நிலைக்கண்ணாடியையும் பார்த்துவிட்டுத் தாட்பாளை நீக்கிக் கதவைத் தான் வருவதற்குப் போதியவளவு திறந்துகொண்டு வெளியேவந்து அங்கு நிற்கும் அழகிகளுக்கு அவர்களும் ஆச்சர்யப்படும்படி அத்புதமாக ஸேவை ஸாதித்தாள். அதை அநுபவித்து மகிழ்ந்த

நாயகப்பெண்— ரொம்ப அபசாரப்பட்டுவிட்டோம். க்ஷமித்தருளவேண்டும்.

பிராட்டி— அப்படி ஒன்றுமில்லை குழந்தாய்! நான்தான் நீங்கள் வந்து கூப்பிட்டவுடன் எழுந்திராமல் உங்களுக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்துவிட்டேனே என்று எண்ணி வருந்துகிறேன். அயர்ந்து தூங்கிவிட்டேன். நீங்கள் வந்து வெகு நாழியாயிற்றோ? பல தடவை எழுப்பியும் நான் எழுந்திருக்காமலிருந்துவிட்டேனே?

நாயகப்பெண்— நாங்கள் வந்து கொஞ்சம் நாழிகை ஆனது உண்மை. பலதடவை எழுப்பினதும் வாஸ்தவம். என்னென்ன எண்ணங்களோ எங்களுக்கு உண்டாயின. அதனால் பலபடி எழுப்பினோம். முடிவாக நீங்கள் இன்னும் தூங்கிக்கொண்டுதான் இருக்கவேண்டுமென்று தோன்றவே இப்போது சிறிது கெட்டியாகக் கூப்பிட்டோம். நாங்கள் நேற்று வந்து ப்ரார்த்தித்துப் போன விஷயத்தைப் பற்றி ஆலோசனை பண்ணி வேண்டிய ஏற்பாடு செய்ய ஆரம்பித்து, ராத்ரி வெகுநேரம் விழித்திருந்து பிறகு நீங்கள் படுத்திருப்பீர்கள். அது காரணமாக இப்போது அயர்ந்து தூங்குகின்ற உங்களுக்கு உபத்ரவம் செய்ய நேரிட்டதே என்று நினைத்து வருந்துகின்றேன்.

பிராட்டி— நீ எண்ணுகிறபடியே தான் விஷயம் நடந்திருக்கின்றது. நீங்கள் வந்துபோன பிறகு தேவர்கள், ரிஷிகள் மற்றும் பலர் வந்து பகவானோடு ஸம்பாஷணம் செய்துவிட்டுப் போனார்கள். அவர்களுக்கு வேண்டியவற்றைப்பற்றியும் பல ஏற்பாடுகள் செய்யவேண்டியிருந்தபடியால் பகவான் சயனிக்கப் போகும்போது நடுநிசிக்குமேல் நாழியாகி விட்டது. ஆனால் அவர் படுத்துக்கொள்ளும்போது 'குழந்தைகள் வந்து எழுப்பினால் எழுந்து கதவைத்திறந்துவிட்டு அவர்கள் என்ன செய்யச் சொல்லுகின்றார்களோ அதையெல்லாம் செய். நான் சொல்ல வேண்டுமென்று எதிர் பார்க்காதே' என்று எனக்குக் கட்டளையிட்டுவிட்டுச் சயனித்தார். ஆகையால் உங்களுடைய குரல் கேட்டதும் அவருக்கு நித்ராபங்கம் செய்யா

மலே நான் மாத்திரம் எழுந்து வந்தேன். எங்களுக்கு உபத்ரவம் செய்துவிட்டதாக நீங்கள் கொஞ்சமும் வருந்த வேண்டாம். இப்பொழுது உங்களுக்கு என்ன வேண்டுமென்று சொல்லுங்கள்.

நாயகப்பெண்— அப்படியா? அவ்வளவுமுன் ஜாக்ரதையாக உன்னிடம் சொல்லிவிட்டுச் சயனித்தான எம்பெருமான்? என்ன க்ருபை? என்ன அநுக்ரஹம்? அது தெரியாமல் நாங்கள் அவனுடைய அநுமதி பெருமல் நீஎழுந்து வந்து கதவைத் திறக்க முடியாதே என்று எண்ணி அவனையும் பல தடவை எழுப்பி அபசாரப்பட்டிருக்கின்றோம். எவ்வளவு மூடத்தனம் எங்களுக்குள்ளது பார்.

பிராட்டி— அதை யெல்லாம் பற்றி நீங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டா மென்றுதான் சொன்னேனே. உங்களுக்கும் உங்களைப் போன்றவர்களுக்கும் வேண்டியதைச் செய்து உதவுவதற்காகத்தானே நாங்கள் இங்கு இருக்கின்றோம். நீங்கள் பயப்படாமல், ஸங்கோசப்படாமல், எவ்வளவுக்கெவ்வளவு நிர்பந்தமாய் ப்ரார்த்தித்து உங்களுடைய இஷ்டங்களை நிறைவேற்றிக்கொள்கின்றீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு எங்களுக்கு ஸந்தோஷம். ஆகையால் அந்த விஷயத்தை மறந்து இப்போது என்ன வேண்டுமென்பதைச் சொல்.

நாயகப்பெண்— பரம அநுக்ரஹம். தேவி அப்படியே சொல்கின்றேன். நாங்கள் நீராட வேண்டும்.

பிராட்டி— அப்படியே நீராடுங்களேன். அதற்கென்ன தடை?

நாயகப்பெண்— உன்மணாளன் நீராடவேண்டும். அவனோடு நாங்களும் நீராடவேண்டும்.

பிராட்டி— ரொம்ப ஸரி. அப்படியே நடக்கட்டும்.

நாயகப்பெண்— நீ அவனையும் எங்களையும் நீராட்டவேண்டும்.

பிராட்டி— அதென்ன? நான் நீராட்டுவதென்றால் அர்த்தமென்ன? எனக்கு விளங்கவில்லையே.

நாயகப்பெண்— உனது காந்தனை பகவானை அபிஷேகாஸநத்தில் எழுந்தருளப் பண்ணி எல்லா உபசாரங்களையும் ஸமர்ப்பித்து பிறகு அவனோடு தீர்த்தத்தில் அவகாஹநஸ்நாநம் பண்ணவேண்டும். அந்த உபசாரங்களுக்கு வேண்டிய வஸ்துக்களை யெல்லாம் நீ தந்தருளவேண்டும். அவை யாவையெனில் ஆஸநத்தில் எழுந்தருளி யிருக்கும்பொழுது விசிறவேண்டும். அதற்காக உக்கமெனப்படுகின்ற விசிறி வேண்டும். திருப்பரியட்டம், திருமாலை முதலியன ஸமர்ப்பித்த உடனே காண்பதற்குத் தட்டொளி எனப்படுகின்ற கண்ணாடி வேண்டும். இவையும் மற்றவையும் நீ தந்தருள்வாயாகில் அதுவே எங்களை நீராட்டுவதாக ஆகும்.

பிராட்டி— அப்படியே தருகின்றேன்.

நாயகப்பெண்— இன்னுமொன்று. உன் மணாளனையும் தந்தருளவேண்டும்.

பிராட்டி— அப்படி யென்றால்? விசிறியும், கண்ணாடியும் போன்ற ஒரு பொருளா அது, நான் தருவதற்கும் நீங்கள் வாங்கிக்கொள்வதற்கும்? நீ பேசுவது ஒன்றும் புரியவில்லையே.

நாயகப்பெண்— பள்ளி யறையின் கதவை நன்றாகத் திறந்து நாங்களெல்லோரு முள்ளே போய் எம்பெருமானை ஸேவிக்கும்படி அநுமதி கொடுக்கவேண்டும். அதுதான் நீ எங்களுக்கு அவனைத் தருவது.

பிராட்டி— ஆனல் அவச்யம் தருகின்றேன். அவர் விழித்துக்கொள்ளட்டுமே.

நாயகப்பெண்— தேவி, அதற்கு முன்னேயே நாங்கள் போய்த் திருப்பள்ளியெழுச்சி பாடும் பாக்யத்தைப் பெற விரும்புகின்றோம்.

பிராட்டி— அதற்கும் சிறிது காலம் போகலாமென்று தோன்றுகிறது. ஆழ்ந்த நித்ரையில் இருக்கின்றார்.

நாயகப்பெண்—இப்போதே எம்மை நீராட்ட வேண்டும் அம்மா நீ. நோன்பு நோற்கவன்றோ நாங்கள் ஸங்கல்பித்திருக்கின்றோம். அதற்குக் காலங் கடக்காமல் கார்யங்களைச் செய்யவேண்டுமே. இனித் தாமதிக்காமல் புறப்பட்டுப்போய் நீராடவேண்டும். ஆகையால் ஒரு க்ஷணமும் விளம்பிக்காமல் இப்போதே நாங்கள் உள்ளே புகுந்து எம்பெருமானையெழுப்ப நீ அநுமதிக்கவேண்டும்.

பெண்களுடையஸ்வரூபம், ஸ்வபாவம், பேச்சின் அழகு இவற்றினல் பரவசையான பிராட்டி அதனாலும், தனது காந்தனுக்கு இப்பெண்களினிடத்திலுள்ள வாத்ஸல்யத்தை நினைத்தும் அவர்களின் விருப்பப்படியே சயநக்ருஹத்தின் எல்லாக் கதவுகளையும் நன்றாகத்

திறந்து எல்லாப் பெண்களும் எம்பெருமானை ஸேவிக்கும்படி விட்டாள். உடனே அவளை முன்னிட்டு உள்ளே சென்ற பெண்கள் ஸ்ரீவை குண்டத்தில் ஆதிசேஷன்மேல் அமர்ந்திருக்கும் அரவிந்தலோசனனை நித்யஸூரிகள்போலவும் க்ஷீராப்தியில் பள்ளிகொண்டிருக்கும் பரமனைத் தேவர்கள் போலவும் கண்ணாரக் கண்டு ஸேவித்து மகிழ்ந்து மெய் மறந்தனர்.

திருப்பாவைக்கதையில் தேவீப்ரபோதனம்
அல்லது பிராட்டியை எழுப்புதல்
என்கிற ஐந்தாம் அதிகாரம்
முற்றிற்று.

---

21 - 22. ஏற்ற, அங்கண்.

நப்பின்னைப் பிராட்டியை முன்னிட்டு எம்பெருமானுடைய சயன க்ருஹத்தின் உள்ளே சென்ற பெண்கள் 'கோட்டுக்கால் கட்டின் மேல் மெத்தென்ற பஞ்சசயனத்தில்' கம்பீரமாகச் சயனித்திருந்த ஸ்ரீக்ருஷ்ணனை ஆபாத சூடம் அதாவது திருவடிமுதல் திருமுடிவரையில் ஸாவதானமாய் நன்றாக ஸேவித்தார்கள். அத்யாச்சர்யமான ஸேவை. கண் இமை கொட்டாமல் ஸேவித்தார்கள். ப்ரஹ்மாநந்தமாக விருந்தது. ஸ்ரீக்ருஷ்ணன் தூங்கிக்கொண்டிருந்தார். அதனால் திருமேனியில் ஒவ்வொரு பாகத்தின் அழகையும் உற்றுப்பார்த்து அநுபவிக்க முடிந்தது. ஆனால் மேல் நடக்கவேண்டிய கார்யங்களில் கவனமுள்ள நாயகப்பெண் உடனே திருப்பள்ளியெழுச்சி பாடவேண்டுமென்பதைத் தன் தோழிகளுக்கு அறிவித்தாள்.

ஸ்ரீக்ருஷ்ணனை என்னவென்று அழைத்து எழுப்புவது என்ற கேள்வி அப்போது எழுந்தது. கீழ் ச்ரிய:பதித்வம், வீர்ய பல பராக்ரமங்கள் என்ற இவற்றால் பரத்வம் பேசப்பட்டது. அதன்பிறகு இப்போது கண்ணால் ஸாக்ஷாத் ஸேவிக்கின்ற அவதார ரூபத்தைப் பற்றிப்பேசுவது உசிதம். அதில் பெரியோர் முகமாகத் தன்னைக்குறிப்பதையே எம்பெருமான் உகப்பானாகையால் நந்தகோபர் மகனாகச் சொல்லி அழைப்பது யுக்தமென்று தோன்றிற்று. ஆனால் நந்தகோபரைக் குறிப்பதைப் பற்றியும் ஆலோசிக்க வேண்டியிருந்தது. மஹாபுத்திசாலியான பெண்ணாகையால் பொருத்தமில்லாமல் தோன்றிய ஏதோ ஒரு பெயரைச் சொல்வது என்பதை அவள் ஸஹிக்க மாட்டாள். சொல்லும் பெயர் ப்ரகரணத்திற்கு மிகவும் ஏற்றதாயிருக்கவேண்டும். 'இப்பெயரை ஏன் எடுக்கவேண்டும். மற்றொரு பெயரை எடுத்துக்கூறினாலென்ன?' என்ற கேள்விக்குத் தக்க பதிலளிக்கும்படியான காரணம் இருக்கவேண்டும். இப்படியெல்லாம் ஆலோசித்தாள்.

இப்போது க்ருஷ்ணன் தூங்குகின்றார். தூக்கத்தை விட்டு எழுந்திருக்கும்படி ப்ரார்த்திக்கவேண்டும். தூக்கத்தை விடுவதற்குக் காலம் வந்துவிட்டது. இனித் தூங்குவது நியாயமில்லை யென்று அறிவிக்க வேண்டும். இதற்குத் தக்க ரீதியில் ஒருபெயரைக் கல்பித்துக் கூறுவோமென்று எண்ணினாள். அப்படியே கல்பித்து

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்
ஆற்றப் படைத்தான் மகனே அறிவுறாய் [கள்

என்று சொல்லி எழுப்பினாள். ஆற்ற— நிரம்ப, படைத்தான் — பெற்றவரான நந்தகோபர். 'வெகு அதிகமான, கணக்கில்லாத பசுக்களை உடைய நந்தகோபருடைய மகனே' என்று கூப்பிட்டாள். பசு ஒவ்வொன்றும் மிகப்பெரியது. யானை போன்றது. அதோடு வள்ளல்; மிகுந்த உதாரத்தனமுடையது. கபடமின்றி ஏராளமாகப் பாலைத் தருகின்றது. எப்படித் தருகின்றதென்பதும் விவரிக்கப் படுகின்றது. பாத்திரத்தைஏந்தி அதில்பால்கறப்பர். ஏந்திய பாத்திரம் வெகு சீக்கிரமே நிறைந்து விடும். பிறகு இன்னொரு பாத்திரத்தை ஏந்திக் கறக்க வேண்டும். அதுவுமப்படியே சீக்கிரம் நிறைந்துவிடும். இப்படி மேல் மேல் எத்தனைப் பாத்திரங்கள் ஏந்தினாலும் ஒவ்வொரு பசுவும் பால் சொரிந்து கொண்டே இருக்கும். எண்ணிறந்த பசுக்களைக் கறக்கவேண்டியிருப்பதால் கறப்பவர்கள் ஐந்து ஆறு எட்டு பத்துப் பாத்திரங்களில் கறந்துவிட்டுத் தாமாக நின்றுவிடுகின்றார்கள். இது இவர்கள் குற்றம். மேல் எத்தனைப் பாத்திரங்களை ஏந்தினாலும் ஒவ்வொரு பசுவும் கறந்துகொண்டே யிருக்கும். மடியில் பாலில்லை, இனி கறக்காது என்பதில்லை.

(தொடரும்)

ஸ்ரீ:

கோதையும் கோவிந்தனும்

கோதையையும் அவள் பாடியுள்ளவைகளில் முக்யமான திருப்பாவையையும் அறியாதார் இவ்வுலகில் இல்லை. அப்படியுளரேல் அவர்களை வையம் சுமப்பது வம்பு.

பெரியாழ்வாரின் பெண்ணான இக்கோதை பால்யம் துடங்கி எம்பெருமானிடத்து ப்ரேமைபூண்டு எம்பெருமானின் அநுபவத்தையே தனக்கு தாரக போஷக போக்யமாக உடையவள். இவளுடைய காதலானது படிப்படியாக வ்ருத்தியாகி, கடைசியில் எம்பெருமானைப் பெற்றல்லது தரிக்கவொண்ணாத நிலை ஏற்பட்டு முடிவில் அவனை அடைந்து இன்புறுகிறாள்.

முலையோ முழுமுற்றும் போந்திலாத தசை முதல் இவள் பேச்சும் செய்கையும் ஸர்வேச்வரன் விஷயமாகவே அமைந்துள்ளது. வீதிவாய் விளையாடும் பர்வத்தில் ஆய்ப்பாடியில் அவதரித்த அரும்பெரும் மாயனோடு தான் விளையாடுவதாகவும் அவன் இவளிடம் சின்னஞ்சிறு சிற்றிலை அழிக்கும்போது அவனை கோபிக்க நிமிர்ந்து நோக்கினவளவில் அவன் முகத்தினழகைக் கண்டு ஈடுபட்டுத் தன்னுடைய சிந்தையைப் பறிகொடுத்து நிற்கிறாள். பிறகு ஓர் கொள்கொம்பிலே சேரும் பர்வம் வந்தபோது மானிடவர்க்கென்று பேச்சுப்படாத தன்மையளாகி ஊனிடை ஆழிச்சங்குத்தமர்க்கென்றே தன்னுடைய தடமுலைகளை ஆதரித்து வளர்த்து வந்தாள். இப்படி எம்பெருமானை மணக்க அவா பூண்டு நிற்குமளவில் தன்னுடைய அவாவற அவன் தன்னைப் பாணிக்ரஹணம் செய்துகொள்வானோ என்று ஒரு ஸமயம் சகுனம் பார்க்கிறாள். இந்தவிடத்தில் 'வள்ளல் மாலிருஞ்சோலை மணாளனார் பள்ளிகொள்ளுமிடத்தடி கொட்டிடக் கூடுமாகில் நீ கூடிடு கூடலே' என்றருளி, எம்பெருமான் திருவடிகளை அடிவருடுவதே பரம புருஷார்த்தம் என்றறுதியிட்டுள்ளாள்.

இவள் காதலானது க்ரமேண வ்ருத்தியாகிக் கொண்டே வந்தது. எம்பெருமானோ ஸேவை ஸாதிக்கவில்லை. அவன் ஸேவை ஸாதிக்காவிடினும் அம்ருதம்போல் உச்சரித்தமாத்ரத்திலேயே ஸகல தாப பாபங்களையும் போக்கக்கூடிய அவன் திருநாமங்களைச் சொல்லச் சொல்லியாவது கேட்டு தரிப்போம் என்று எண்ணி தான் வளர்த்த குயில், கிளி முதலியவைகளை வேங்கடவனை வரக் கூவச்சொல்லுகிறாள். அதுவும் சற்றுதான் தரிப்புக்கு உடலாயிற்று.

பிறகு பழைய காதலை விஞ்சி எம்பெருமானின் விஷயமான ஸ்வப்நம் கூட தனக்கு நேரவில்லையே என்று சோர்கிக்குமளவில், வாரணமாயிரம் சூழ, ஓர் பெரிய காளை புகுந்து பார்ப்பனச்சிட்டர்கள் பல்லாண்டேத்த தன்னைப் பாணிக்ரஹணம் செய்துகொள்வதாகச் சனாக் கண்டாள். அதுவும் கேவலம் கனாவாக முடிந்தபடியால் விழித்ததும் பழைய காதலை தலையெடுத்தது. தம்முடைய காதலை எம்பெருமானுக்குத் தெரிவிக்க எண்ணி 'சங்கமா கடல் கடைந்தான் தண்முகில்காள் வேங்கடத்துச் செங்கண்மால் சேவடிக்கீழ் அடிவீழ்ச்சி விண்ணப்பம், கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து ஒரு நாள் தங்குமேல் என்னாவி தங்குமென்று உரையீரே' என்று மேகங்களை எம்பெருமான் திருவடிகளில் தன்னுடைய ஆராத காதலை விஜ்ஞாபிக்கும்படி ப்ரார்த்திக்கிறாள். தூது விடுவதால் ஆசார்யர்களைக் கொண்டு எம்பெருமானை அடைவது என்கிற ஶாஸ்த்ரார்த்தம் வெளியிடப்படுகிறது. அவைகள் அசேதநங்களாகையாலே போகாதொழிந்தன.

இவ்வளவு ஆர்த்தி எற்பட்டும் ஸர்வேச்வரன் தன்னை அங்கீகரிக்காததினால் சற்று நிதானித்து அவன் தேர்த்தட்டிலும் கடற்கரையிலும் பேசியுள்ள வார்த்தைகளை நினைத்து 'பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்குப் பண்டொரு நாள் மாசுடம்பில் நீர்வாரா மானமிலா பன்றியாம், தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார் பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே' என்றபடி சற்று தரித்துப்பார்த்தாள்.

ஆனால் இவள் காதலானது கடலின் மிகப் பெரிதாய் வளர்ந்து கொண்டே வருவதால் இதெல்லாம் சற்று தான் தாரகத்திற்கு உடலாயிற்று. பகவானிடத்தில் உள்ள ப்ரேமையானது முடிந்தும் பிழைக்கவொட்டுகிறதில்லை. ஜீவித்திருந்தால் 'ஏதி ஜீவந்தமாநந்தோ நரம் வர்ஷசதாதபி' என்கிறபடி அநேக காலங்கள் கழித்தாவது ஆநந்தத்தை அடையலாமோ என்கிற நசையானது முடியவொட்டுகிறதில்லை. மேலும் பகவதநுபவமானது எப்போது கிட்டும் என்று கோதையின் கரணங்கள் (இந்த்ரியங்கள்) விடாய்த்திருப்பதால் தான் முடிந்து பரமபதம் போய் அக் கைங்கர்யத்தையடைய அபிப்ராய முடையவளல்லள். விடாய்த்த போது தண்ணீரில்லாமல் வி ாய் தீர்ந்தவாறே தண்ணீரால் ப்ரயோஜனமில்லையிறே. 'யதா தம் புருஷவ்யாக்ரம் காத்ரை: சோகாபிகர்சிதை: । ஸம்ஸ்ப்ருசேயம் ஸகாமாஹம் ததா சோகம் ஜஹாம்யஹம்' என்று பிராட்டி மனோரதித்த மாதிரி இவளும், 'கோவிந்தற்கோர் குற்றேவல் இம்மைப்பிறவி செய்யாதே இனிப்போய்ச் செய்யுந்தவந்தானென்' என்று இம்மையிலேயே தன்னுடைய இந்த்ரியங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பெருவிடாயெல்லாம் தீரும்படி எம்பெருமானை அநுபவிக்கப் பாரிக்கிறாள். இந்த நிலையையிறே தேசிகாதிகளும் பின்பற்றினபடி. 'வைகுண்டவாஸேபி நமே பிலாஷ:' என்றும் 'விண்ணவர் வேண்டி விலக்கின்றி மேவும் அடிமையெல்லாம் மண்ணுலகத்தில் மகிழ்ந்தடைகின்றனர்' என்றுமிறே ஸ்ரீ தேசிகனின் அருளிச்செயல். ஆழ்வார்களின் நிலையும் இப்படியேயிறே இருப்பது. இந்த நிலையை இவளுடைய காதலானது எய்தின போதும் ஸர்வேச்வரன் முகங் காட்டவில்லை. அவன் ஆமத்தில் சோறிடாதவனானகையால் இன்னும் இவளுடைய காதலை வ்ருத்தி பண்ணத் திருவுள்ளம்பற்றி தான் ஸேவை ஸாதிக்காது சற்று விலகி நின்றான்.

ஸர்வேச்வரன் விளம்பித்தவளவில் கோதையானவள் தன்னை ஸர்வேச்வரன் உபேக்ஷித்தான் என்று எண்ணினாள். அவளுடைய காதலானது மிகவும் பெரிதாகி உடனே எம்பெருமானைப் பெற்றல்லது தரிக்கவொண்ணாத தசையை உண்டாக்கிற்று. 'உள்ளேயுருகி... கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கைதனைக் கிழங்கொடும் அள்ளிப்பறித்திட்டு அவன் மார்பிலெறிந்து என் அழலைத் தீர்வேனே' என்கிறபடி பால்யம் தொடங்கி அவனுக்கென்றே வளர்த்து வந்த தன்னுடைய ஸ்தனங்களைக் கிழங்கொடும் அள்ளிப்பறித்து அவன் மார்பிலெறிந்து தன் கோபத்தைத் தீர்க்கத் துணிந்தாள். இவ்வளவு உத்கடமான ஆர்த்தியைத் தான் ஸர்வேச்வரன் எதிர்பார்க்கிறானாகையால் 'இனி தாமதித்தால் கோதையின் ஸ்வரூபத்திற்கே ஹாநி ஏற்படும்' என்று எண்ணி, உடனே ஸேவை ஸாதித்து கோதையை அங்கீகரித்தான்.

க்ஷமையே வடிவுகொண்ட கோதைப்பிராட்டியை ஸர்வேச்வரன் அங்கீகரித்த பிறகுதான் ஆர்த்ராபராதிகளான நாம் பயமின்றி எம்பெருமானை அணுக இடமுண்டாயிற்று. அவளில்லாவிடில் ஸர்வேச்வரன் நம் விஷயத்தில் பராங்முகனாகவே யிருப்பன். எம்பெருமானை ஸாக்ஷாத்தாக ஸ்தோத்ரம் பண்ணி அடைய முடியாத ஒரு விசேஷப்ரஸாதத்தை கோதையின் அருளைப் பெற்றவாறே அடைந்தார்கள் என்பது ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனின் அநுபவம். ஆகையால் கோதையின் அருளே நமக்கு எப்போதும் தஞ்சமாகக் கடவது.

शतमखमणिनीला चारुकल्हारहस्ता स्तनभरनमिताङ्गी सान्द्रवात्सल्यसिन्धुः ।
अलकविनिहिताभिः स्रग्भिराकृष्टनाथा विलसतु हृदि गोदा विष्णुचित्तात्मजा नः ॥

ஸ்ரீ:

ஸ்வதர்மம்

ஸ்வதர்மம் என்னும் வடமொழித்தொடருக்குத் 'தன்னுடைய கடமை' என்பது பொருள். வேதங்கள், தர்மசாஸ்த்ரங்கள், இதிஹாஸங்கள், ஸாத்விகபுராணங்கள் ஆகிய இவை, அறிவிலிகளான மனிதர்களை உஜ்ஜீவிப்பிப்பதற்காகவே ப்ரவ்ருத்தித்திருக்கின்றன. இவற்றுள் எதெது எவரெவர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதோ, அததில் கூறியபடி அவரவர்கள் தவறாமல் அநுஷ்டிப்பதே அவரவர்களுக்கு ஸ்வதர்மமாகும். இந்த ஸ்வதர்மாநுஷ்டாநத்தினால்தான் அவனவனுக்கு ஸுகமும் துக்கநிவ்ருத்தியும் ஸித்திக்கின்றன. மனிதனுக்கு உலகில் கீர்த்தியும் கௌரவமும் நல்லொழுக்கமும் ஜ்ஞாநமும் சாந்தியும் ஸதாசாரமும் அபிவ்ருத்தியும் உத்ஸாஹமும் ஆரோக்யமும் நீண்ட ஆயுளும் இவையெல்லா மேற்படுவதற்கு, இந்த ஸ்வதர்மாநுஷ்டாநமொன்றே காரணமாக இருக்கிறது. இவைகளை அவன் இம்மையில் அடைவதோடு மறுமையிலும் சாசுவதமான ஸுகத்தைப் பெறுகிறான்.

தனக்குரிய வேஷம் பாஷை செய்கை எல்லாவற்றையும் ஸ்வதர்மகோடியில் சேர்க்கலாம். ஒவ்வொருவனும் தன் வயதுக்கும் செய்கைக்கும் பொருளுக்கும் படிப்புக்கும் குலத்துக்கும் தக்கபடி, வேஷம் வசநம் வ்ருத்தி இவைகள் ஒத்திருக்கும்படி நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு நடந்து கொள்வது அவனுக்கு மேன்மை பயக்கும். அப்படிக்கின்றி, ஒருவித வரம்பினும் கட்டுப்படாமல் நினைத்த வண்ணம் வேஷத்தையும் பாஷையையும் ஆசாரத்தையும் மாற்றுவது அவனுடைய தைர்யத்தைக் காட்டுகிறது. சில நவீன லௌகிகர்கள் 'கிராப்' வெட்டிக்கொள்ளல், ஸ்த்ரீ-புருஷர்கள் அகச்சர்களாக விருத்தல் முதலிய துராசாரங்களைத் தம் ஆபாஸமான யுக்திகளைக் கொண்டு, அவை நல்லனவென்று ஸ்தாபிக்கவும் முயலுகிறார்கள். அறிவுடையோர் அந்தயுக்திகளை ஏற்றுக்கொள்ள மாட்டார். இப்படி நவநாகரிகர் கூறுவதற்குக் காரணம், அவர்களுடைய தைர்யமும் அஸத்ஸங்கமுமே. இந்த அஸத்ஸங்கமே எல்லா அநர்த்தங்களுக்கும் மூலகாரணமென்பது ஹான்களின் கொள்கை. ஒருவனுக்கு அநேக சிறந்த குணங்கள் இருந்தாலும், அவனுக்குத் தீயோர் சேர்க்கை மாத்ரமிருக்குமேல் அவனுடைய அத்தனை நற்குணங்களும் விஷத்துளி விழுந்த பாற்குடம்போல் கெட்டுப்போய் விடும். இதனாலேயே நற்குணமுள்ள பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு இளமைப் பருவத்தில் நல்லாசிரியருடைய சேர்க்கையையும் நற்படிப்பையும் நற்குணங்களையும் நன்னடத்தைகளையும் ஏற்படுத்தி, அஸத்ஸங்கம் நேரவொட்டாதபடி செய்துவந்தார்கள். அந்த அஸத்ஸங்கம் நீங்கினால், மனிதனுக்கு ஸ்வமதம் ஸ்வகுலம் ஸ்வதர்மம் ஸ்வாசாரம் இவைகளில் தானாகவே பற்றுண்டாகிறது. மலை போன்ற விபத்துக்கள் வந்தாலும் ஸ்வதர்மத்தில் மனவலிமை கொண்டு அசைவற்று நிற்பவன், அந்த விபத்துக்களைக் கடந்து ஸுகத்தைப் பெறுவான். இந்த விஷயத்தில் பாகவதோத்தமனான ப்ரஹ்லாதன் ஸாக்ஷி. ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வான் எத்தனைத் துன்பங்கள் வரினும், அவற்றைப்பொருட்படுத்தாது ஸ்வதர்மத்தை உறுதியாகக் கடைப்பிடித்து நின்றமையால், அவன் இம்மை மறுமைப் பேறுகளைப் பகவான் அருளால் அடைந்தான். பரமச்ரேயஸ்ஸைக் கொடுக்கத்தக்க ஸ்வதர்மத்தை ப்ராஹ்மணராகிய நாம் இழந்தமையால் ப்ரக்ருதம் இக்கதிக்கு ஆளாகி நிற்கிறோம்.

ஸந்த்யாவந்தனம், ஜபம், ஹோமம், பகவதாராதநம், அதிதிபூஜை, வைச்வதேவம் ஆகிய இவ்வாறு கர்மாக்களும் நாள்தோறும் அவசியம் ப்ராஹ்மணர்களால் அநுஷ்டிக்கப்படவேண்டியவைகள். இப்போது இவை முற்றிலும் லோபித்து விட்டன. ஆயிரம் ப்ராஹ்மணர்களுக்குள் யாரோ ஒருவர் இவைகளை அநுஷ்டிப்பரோ இல்லையோ? ஸந்தேஹம். மநுஷ்யன்

கர்மபாசம் நீங்கி முமுக்ஷு ஆவதற்கும், பரம புருஷனுடைய ப்ரஸாதத்தைப் பெறுவதற்கும் இந்த ஸ்வதர்மாநுஷ்டாநமே ஸாதநம். காலபலத்தால் தர்மங்களுக்கு இப்போது லோபம் வந்து விட்டது. 'எல்லாத் தர்மங்களும் கலியுகத்தில் நஷ்டங்களாகிவிடும்' என்னும் மஹர்ஷியின் வசநம் வீணுகுமா? மஹர்ஷிகள் தங்கள் ஜ்ஞாநத்ருஷ்டியினுல் எதிர்கால வாலாறுகளையும் கண்டறியும் திறமை வாய்ந்தவர்களன்ருே? இது கலிபுருஷனுடைய ஸாம்ராஜ்யம் நிரங்குசமாக நடைபெறுங்காலம், கலியின் முதிர்ச்சியால் ப்ராஹ்மணர்களுக்குக் காணத்ரயமும் கெட்டுவிட்டது. துரந்நபோஜநம் அவர்களுடைய முகத்தை அசுத்தமாக்கி விட்டது. துஷ்ப்ரதிக்ரஹம் அவர்களுடைய கையைக் கெடுத்துவிட்டது. சிந்திக்கத்தகாத வஸ்துக்களைச் சிந்திப்பதால் மனமும் அசுத்தமாயிற்று. இந்தக் காரணங்களைக் கொண்டு நாம் நிர்வீர்யர்களாகி, கண்டவர்களும் காலால் இடறிச் செல்லும்படியான நிலைக்கு வந்துவிட்டோம். முற்காலத்திலிருந்த வஸிஷ்ட விசுவாமித்ரர்களுடைய ப்ரபாவத்தை நினைத்துப் பார்த்தால் உடல் கம்பிக்கின்றது. திருவயோத்தியில் ஸ்ரீ சக்ரவர்த்தித்திருமகன் திவ்ய ஸபையில் வஸிஷ்டருக்கு இருந்த கௌரவம் என்ன? அவ்வாறே தசரதமஹாராஜன் பக்கல் விசுவாமித்ரர் யாகஸம்ரக்ஷணர்த்தம் ஸ்ரீ ராமபிரானை யாசிக்கவந்த காலத்தில், அவரைக் கண்டு அரசன் பரபரப்புடன் எதிர்கொண்டு வந்து 'நிலம் செய் தவம்' இத்யாதியான மதுரமான வசநங்களை வெளியிட்டுக்கொண்டு அவருடைய மநோரதத்தைப் பூர்த்தி செய்விப்பதில் அரசனுக்கு உண்டான த்வரையும் பக்தியும் என்ன? அந்த மஹர்ஷிகளும் ப்ராஹ்மணர்கள்! நாமும் ப்ராஹ்மணர்களா? ப்ராஹ்மணபதர்மத்தாலேயே மஹர்ஷிகளும் நாமும் ஸாம்யமுள்ளவர்கள் என்று சொல்வது, பதார்த்தத்வம் என்கிற தன்மையினுல் மலையும் பரமாணுவும் ஸமம் என்று சொல்வது போல் பரிஹாஸத்துக்கு இடமாகிறது.

பகவத்கீதையில் ஸ்ரீ கண்ணபிரான் அர்ஜுநனை உத்தேசித்து, 'அப்பா! அர்ஜுநா! ஸ்வதர்மாநுஷ்டாநமே முக்யம்; அதை நீ கைவிடக்கூடாது; அதை அநுஷ்டித்தால் எல்லா நன்மைகளையும் அடைவாய்; நீ சோகத்துக்கு இடங்கொடாதே; மனச்சோர்வை நீக்கி, தைர்யத்தை மனத்திற்கொண்டு, ஸ்வதர்மமான யுத்தத்தைச் செய்' என்று ஸ்வதர்மத்தையே செய்யத்தக்க தர்மமாக உபதேசித்திருக்கிருர். இதை அநுஷ்டிப்பதில் கொஞ்சம் ந்யூநதை ஏற்பட்டாலும் பாதகமில்லை, அதனுல் நன்மையே உண்டாகும். அந்யதர்மங்களை மாத்ரம் எப்போதும் கைப்பற்றலாகாது. இப்போது பாலர் முதல் வயது முதிர்ந்தவர் வரை 'க்ராப்' வைத்துக்கொள்ளுகிருர்கள். 'நிஜார்' 'தொப்பி' அணிகிருர்கள். இவைகள் யாவும் ஸ்வதர்மங்களா? நம்நாட்டு நடையுடைபாவனைகள் தானு? இவை நம் நாட்டினர்க்கு அவசியமா? இப்போது ஜைத்ரயாத்ரை செய்து கொண்டுவரும் நம் ஸ்ரீ அழகியசிங்கர், தாம் எழுந்தருளுமிடமெல்லாம் சிகையின் ஏற்றத்தைப்பற்றியும், ப்ராஹ்மணர்களின் கர்மாநுஷ்டாநங்களைப்பற்றியும் சிஷ்யர்களின் உஜ்ஜீவநார்த்தம் விரிவாக உபந்யாஸாதிகள் செய்து கொண்டு வரும்படியிருக்கிறது. அந்த ஸ்ரீ ஸூக்தியைக் கேட்டுப் பலர் திருந்திவருவதாகவும் தெரிகிறது. தவிர:- அஜ்ஞானத்தால் அந்யர்களுடைய வேஷபாஷாதிகளை நாகரிக பாவனையால் ஏற்று, ஸ்வமதம் ஸ்வாசாரம் ஸ்வஜாதி ஸ்வதர்மம் இவைகள் அனைத்தையும் இழந்து இருப்பவர்களாயிருக்கிற ப்ராஹ்மணர்களின் நிலையைப் பார்த்து, இளமையிலேயே ப்ராஹ்மணச் சிறுவர்க்கு நற்பழக்கங்களை ஊட்டிவிட்டால், முதுமையில் அவை த்ருடமாய் நிலைக்கும் என்கிற காரணத்தைக்கொண்டு ஸ்ரீ மதுராந்தகம், பாதூர், மாம்பலம் முதலிய விடங்களில் பாடசாலைகளைத் தம் சொந்த செலவில் ஏற்படுத்தி, அதில் ஆங்கிலம், ஸம்ஸ்க்ருதம், தமிழ், கணக்கு முதலியவைகளைத் தக்க ஆசிரியர்களைக்கொண்டு இலவசத்தில் கற்பித்து வரும்படி செய்திருக்கிருர். இது கருணையின் கார்யமன்ருே? இம்மாதிரி பாடசாலைகள் பற்பலவிடங்களில் ஏற்படுத்தப்படுமானுல் சில்லாண்டுகளில் அப்பாடசாலை மாணவர் ஸநாதநதர்மத்தைக் கடைப்பிடித்து விளங்குவதுடன், க்ஷேமமும் நீங்குமென்பது திண்ணம்.

ஸ்ரீ:

ஸரஸஸல்லாபம்

[ஸுமுகன் — ஸுகுணன் என்னும் இரண்டு கந்தர்வர்கள் பூலோகத்தைப் பார்த்து ஸரஸஸல்லாபம் செய்கிறார்கள்]

ஸுமுகன்— இன்று என்ன விசேஷம்? அதோ பூலோகத்தில் எல்லாக்ஷேத்ரங்களிலும் வீதியில் எழுந்தருளும் அர்ச்சாரூபியான மஹாபுருஷர் யார்?

ஸுகுணன்— இவரைத் தெரியாதா உமக்கு! இன்று புரட்டாசித்திருவோண நன்னாளல்லவா? ஆசார்யோத்தமரான கவிஸார்வபௌமர்— தூப்புல் வள்ளல் எழுந்தருளுகிறார்.

ஸுமு— என்ன! கவிஸார்வபௌமரா? ஓஹோ, இம் மஹாபுருஷரின் மஹிமை அபாரமல்லவா?

ஸுகு— ஆமாம்; உமக்கு ஆதிகவிஸார்வபௌமரைப்பற்றி ஏதேனும் தெரியுமோ?

ஸுமு— அது யார் இன்னொரு கவிஸார்வபௌமர்?

ஸுகு—சொல்லுகிறேன் கேளும். பிராட்டியின் வைபவத்தை விஸ்தாரமாக எடுத்துரைத்த ஆதிகவி அவர்.

ஸுமு— அப்படியென்றால்? விளங்கச் சொல்லும்.

ஸுகு— அவர்தான் வால்மீகிபகவான்.

ஸுமு— அவர் ராமாயணத்தையல்லவா செய்தார்?

ஸுகு— அதையே ராமாயணம், பிராட்டியின் வைபவம், ஸீதாசரிதம் என்றும் சொல்லுவது.

ஸுமு— அது எப்படியாகும். ஏன் ஸ்ரீ பாகவதத்தில் வ்யாஸபகவான் பிராட்டியின் வைபவத்தைக் கூறவில்லையா?

ஸுகு-இல்லை. பாகவதத்தில்- பத்தாவது ஸ்கந்தத்தில்- ஐம்பது அத்யாயங்களுக்குமேல் 3-4 அத்யாயங்களில்மாத்திரந்தான் கொஞ்சம் பிராட்டியின் வைபவம் சொல்லப்படுகிறது. ராமாயணம் 7 காண்டங்களிலும் பிராட்டியின் வைபவத்தையே விஸ்தாரமாகச் சொல்லுவதால் இதற்கு ஸீதாசரிதம் என்றே வால்மீகி பெயரிட்டார். ஆகையால்தான் 'ராமாயா:- அயநம்= ராமாயணம். ராமா என்றால் ஸ்த்ரீ. (லக்ஷ்மீ) அவளுடைய சரித்ரம் என்றுதான் அர்த்தம்.

ஸுமு— அப்படியா; இது நல்ல யுக்திதான். ஆனால் அந்த வால்மீகிபகவான் என் பெருமாளை விட்டுப் பிராட்டியின் வைபவத்தையே விஸ்தரித்தார்?

ஸுகு— பெருமாளின் வைபவத்தையும் சொல்லாமலில்லை. ப்ரதானமாக ஸீதையின் வைபவத்தை விஸ்தரித்து, அவள்மூலமாகப் பெருமாள்வைபவத்தையும் வெளியிட்டார்.

ஸுமு— அவருக்கு ஏன் ஸீதையினிடத்தில் மாத்திரம் பக்ஷபாதமோ?

ஸுகு— உண்மையைத்தான் வெளியிட்டார். ஒருவிதத்தில் பக்ஷபாதமும் உண்டு என்றுஞ் சொல்லலாம்.

ஸுமு- அதெப்படி?

ஸுகு—என்ன இருந்தாலும் வால்மீகியின் உடன்பிறந்த-ஸஹோதரியல்லவா ஸீதை?

ஸுமு— இது என்ன புதிர்போடுகிறீரே! ஸீதையாவது வால்மீகிக்குத் தங்கையாவது! விளங்கச் சொல்லவேணும்.

ஸுகு— நீர் ரஸிகராகையால் உமக்குச் சொல்லுகிறேன், கேளும். ஸீதை பூமியின் புத்ரி; வால்மீகியும் பூமிபுத்ரர்; ஆகையால் ஸீதைக்குத் தமயனாகவேண்டும்.

ஸுமு— அதெப்படிஸ்வாமின்! வால்மீகி புற்றிலிருந்தல்லவா உண்டானார்?

ஸூ—கு– அதனுல்தான் சொன்னேன். வேதத்தில், வல்மீகத்தை பூமிக்குக் காதாகச் சொல்லியிருக்கிறது. ஆகையால்தான் இந்த தூப்புல்குலமணியும் யாதவாப்யுதயத்தில் ‘வஸூதாச்ரோத்ரஜே தஸ்மிந்’ என்று ஸாதிக்கிருர். பூமியின் காதில் பிறந்தவரும், பூமியில் பிறந்தவளும் உடன்பிறந்தவர்கள் என்று சொல்லுகிறேன்.

ஸூ—மு– தெரிந்துகொண்டேன் உமது ரஸிகத்தன்மையை. இதைக்கேட்ட பிறகு எனக்குக்கூட ஒரு ஸ்வாரஸ்யம் தோன்றுகிறது.

ஸூ—கு– அப்படியா! சொல்லும்; நானும் தெரிந்துகொள்ளுகிறேன்.

ஸூ—மு– அதனுல்தான் ராமனும் ஸீதை பூர்ணகர்ப்பிணியாக இருக்கும்பொழுது ப்ரஸவிப்பதற்காக பிறந்தகமான வால்மீகி (உடன் பிறந்தான்) ஆச்ரமத்திற்கு அனுப்பினுர்போலும். அபவாதமென்பது வெரும் வ்யாஜம்.

ஸூ—கு–தேவலையே உம்முடைய ராஸிக்யம்! ஆனுல் நேராகத் தமயன் வீட்டில் கொண்டு விடாமல் தமயனிருக்குமிடத்திற்கு ஸமீபத்திலல்லவா லக்ஷ்மணன் விட்டுவந்தார்?

ஸூ—மு– அதற்கும் காரணமுண்டு. என்னெனில், ப்ரஸவிக்கத் தன்பத்நியைப் பிறந்தகத்திற்கு பர்த்தா வழியனுப்பக் கூடாது; பிறந்தவீட்டவர்களே வந்து அழைத்துப் போகவேண்டும். அப்படி ஒருவரும் வந்து அழைத்துப்போகாத கோபத்தால்தான் லோகரீதியையநுஸரித்துத் தன் மைத்துனன் வீட்டிற்கு ஸமீபித்த இடத்தில் விட்டுவரும்படி தம்பியையனுப்பினுர் ராமன். பிறகு லக்ஷ்மணன் விட்டுச்சென்றவிடத்தினின்றும் தங்கையை அழைத்துச்சென்ருர் வால்மீகி. ப்ரஸவித்ததும் இரண்டு குழந்தைகளுக்கும் குச—லவர்கள் என்று பெயரிட்டுத் தாம் செய்தருளின ஸீதாசரிதத்தை மருமகன்களான அவர்களுக்கு உபதேசித்து, அவர்கள்மூலமாக அதைப் பரவச்செய்து, தன் மாப்பிள்ளையும் கேட்டு மகிழும்படிச் செய்தார்.

ஸூ—கு– உம்முடைய கருத்து உயர்ந்தது. இப்படியல்லவோ ‘போதயந்த: பரஸ்பரம்’ என்று எப்பொழுது மிருக்கவேண்டும். இன்னும் ஒரு விசேஷம், சொல்லுகிறேன்கேளும். அதனுல்தான் பிராட்டியின் வைபவத்தை ஸம்பூர்ணமாக நிலைநாட்டிய கவிஸார்வபௌமரான நம் தூப்புல்வள்ளலும் ஆதிகவி வால்மீகியை கோதாதேவியின் புத்ரன் என்றும், கவிஸார்வபௌமர் என்றும் கொண்டாடுகிருர்.

ஸூ—மு–இதையும் விளங்கும்படிச் சொல்லவேண்டும்.

ஸூ—கு-கவிதார்க்கிகஸிம்ஹம் கோதாஸ்துதியில் ‘வல்மீகத:ச்ரவணதோ வஸூதாத்மநஸ்தே ஜாதோ பபூவ ஸ முநி: கவிஸார்வபௌம: | கோதேகிமத்புதமிதம் யதமீஸ்வதந்தே வக்தாரவிந்தமகரந்தநிபா: ப்ரபந்தா: ||’ என்று. ‘கோதாதேவியே! (வாக்கையளிப்பவளே) பூமிஸ்வரூபையான உனது வல்மீகமென்னும் காதிற்பிறந்த அந்த ரிஷியே கவிஸார்வபௌமரானுல், உன்னுடைய தேனெழுகும் ப்ரபந்தம் எல்லோருக்கும் ருசிப்பதில் என்ன ஆச்சர்யம்’ என்று வால்மீகியை கவிஸார்வபௌமர் என்று கொண்டாடுகிருர்.

இருவரும்– கவிஸார்வபௌமரின் மஹிமை கவிஸார்வபௌமருக்கேதான் தெரியும். ஆகையால் நாமும் அதோ எழுந்தருளும் கவிஸார்வபௌமரான தூப்புல்மணியைஸேவித்து ஆசார்யன் க்ருபைக்குப் பாத்ரமாகி, எப்பொழுதுமித் திருவோணநன்னுளின் ஞாபகார்த்தமாகஒரு ஆசார்யஜயந்திமலர் வாங்கிவருவோம். நம்முடைய ஸரஸ ஸல்லாபத்தையனுஸரித்து ஸீதாசரித்ரமும் அதன் உண்மையறிந்த கவிஸார்வபௌமர்களின் வைபவமுமதில் ப்ரசுரமாகியிருக்குமல்லவா?

ஸ்ரீ:

யதோக்தகாரி ஸ்தோத்ரம்

இந்த ஸ்தோத்ரம் ஸ்ரீமந் நிகமாந்தமஹா தேசிகனால் அருளிச்செய்யப்பட்டது. ஸரஸ்வதீ மிகுந்த கோபத்துடன் வேகவதிநதியாகப் பெருகி, ப்ரஹ்மாவின் அச்வமேதயாகபூமியை அழிப்பதாக உபக்ரமிக்க, ப்ரஹ்மா அச்வமேதயாகத்திற்கு வந்த விக்னத்தைப் போக்க பகவானிடம் சரணாகதி செய்ய, ஸகலலோகைகஸேதுவான ஸர்வேச்வரன் ப்ரஹ்மாமீது கருணைகொண்டு ஸரஸ்வதீப்ரவாஹத்தின் நடுவில் பாம்பணையோடுகூட தானும் ஓர் அணையாகக் கிடந்தான். இப்படி வேகவதியாய் வந்த ஸரஸ்வதியின் கோபவேகம்அடங்கும்படி வெஃகாவில் துயிலமர்ந்த வேந்து கடாக்ஷிக்க, கலக்கமற்று வந்த ஸரஸ்வதியையும் கூட்டிக்கொண்டு ப்ரஹ்மா அச்வமேதத்தை நடத்தினான். ப்ரஹ்மா சொன்னவண்ணம் இடையூறை விலக்கி அச்வமேதத்தை நடத்திவைத்ததாலும், திருமழிசையாழ்வார் தன் சிஷ்யனான கணிகண்ணனுக்கு ஏற்பட்ட ராஜபாதையால் அந்த சிஷ்யனோடே காஞ்சியை விட்டகல எண்ணி தன் முன்பேவந்து 'நான் போகிறேன், நீயும் ஆதிசேஷனுடன் வரவேண்டும்' என்று விண்ணப்பஞ்செய்ய, தான் அவர்பின்னே எழுந்தருளினபடியாலும், அரசனபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டதின்பேரில் ஆழ்வார் சிஷ்யனுடன் திரும்பி ஸ்வதேசம் வர நினைத்து ஆதிசேஷனுடன் திரும்பி முன்போல் ஸ்வஸ்தானத்திற்கு எழுந்தருளவேணுமென்று தன்னிடம் விண்ணப்பஞ்செய்ய, தான் ஆழ்வார்பின்னே வெஃகாவுக்குத் திரும்பி யெழுந்தருளினபடியாலும், ஆழ்வார், இப்படிப்பட்ட ஸௌலப்யத்தைக்கண்டு இந்த ஸௌலப்யம் தோற்றும்படி மற்ற எம்பெருமான்கள்போல் வலதுகையைத் தலையணையாகக் கொள்ளாதே இடதுகையைத் தலையணையாக வைத்துக்கொள்ளவேணுமென்று ப்ரார்த்திக்க, அதன்படி இடதுகையைத் தலையணையாக வைத்துக்கொண்டு சயனித்துக்கொண்டபடியாலும் யதோக்தகாரி(சொன்னவண்ணம் செய்கிறவர்) என்று திருநாமமுள்ள எம்பெருமான் இந்த ஸ்தோத்ரத்திற்குப் ப்ரதிபாத்யன். ஆகையாலிதற்கு யதோக்தகாரிஸ்தோத்ரம் என்று பெயர் ஏற்பட்டது. இது 10 ச்லோகங்கள் உள்ளது. வரதராஜபஞ்சாசத்திற்குப் பிறகு இந்த ஸ்தோத்ரமருளிச்செய்யப்பட்டதென்றும், இதில் பரத்வம், ஸௌலப்யம், உபாயாந்தரஸ்தாநாபந்நத்வரூப உபாயத்வம், மோக்ஷப்ராபகத்வம், அநிஷ்ட நிவர்த்தகத்வம், இஷ்டப்ராபகத்வம், பக்தபராதீனத்வம், சரண்யத்வம் முதலிய பகவானுடைய கல்யாணகுணங்கள் சொல்லப்படுகின்றனவென்றும் வ்யாக்யானத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதில்— 'ஏகம் வேகவதீ மத்யே ஹஸ்திசைலே ச த்ருச்யதே । உபாய பலபாவேந ஸ்வயம் வ்யக்தம் பரம் மஹ: ॥' என்பது முதல் ச்லோகம். தன்னிச்சையால் ஆவிர்பவித்தும் ஸர்வோத்க்ருஷ்டமாயுமிருக்கிற ஸ்ரீபதிரூபமான ஒரு தேஜஸ்ஸானது வேகவதீ என்னும் நதியின் நடுவிலும் ஹஸ்தி என்னும் மலையிலும் உபாயமாகவும் (ப்ரஹ்மாவின் அச்வமேதத்தை, அதன் இடையூறை விலக்கிநடத்திவைத்தபடியாலும், யதோக்தகாரியாக வவதரித்து, ஹஸ்திகிரியின் உச்சியில் ஆவிர்பவித்த வரதன் என்று திருநாமமுள்ள பகவானுடையஸேவைக்குக் காரணமானபடியாலும்) பலமாகவும் (ப்ரஹ்மாவினால் அநுஷ்டிக்கப்பட்ட அச்வமேதத்தின் பலமாக தேவாதிராஜனாக ஹஸ்திகிரியில் அவதரித்தபடியால்)ஜனங்களால் காணப்படுகிறது என்று இதினர்த்தம். இவ்விடத்தில் யதோக்தகாரியினுடையவும் வரதனுடையவும் திவ்யமங்கள விக்ரஹங்கள் ஸ்வயம்வ்யக்தங்கள் என்கிற உத்க்ருஷ்ட மூர்த்திவிசேஷங்கள் என்று ஏற்படுகிறது. 6-வது ச்லோகத்தில் பரமபக்தரான திருமழிசைப்பிரானுடன் கூடப் போனவரான பகவானுடைய போக்குவரத்துக்கள் ஜனங்களுடைய ஸம்ஸாரமார்க்கத்தில் போக்குவரத்தைப் போக்கடிக்கின்றன என்றும், 8வது ச்லோகத்தில் யதோக்தகாரியின் ஸமீபத்தில்

வாதனெழுந்தருளியிருப்பதாலேவாதனுடைய வரத்தைக் கொடுப்பதில் ஸாமர்த்யம் நூறு மடங்கு வ்ருத்தியடைகிறதென்றும், 10-வது ச்லோகத்தில் இந்த ஸ்தோத்ரத்தை அநுஸந்திப்பவர்களுக்கு பகவான் சொன்னவண்ணம் செய்கிறுன் என்றும் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

இந்தஸ்தோத்ரத்தில் முதல் ச்லோகம் ஸ்ரீ தேசிகனுல் அருளிச்செய்யப்பட்டதாகச் சில வ்யாக்யானங்களால் தெரியவருகிறது. ஸ்ரீ தேசிகனருளிச்செய்த ஹஸ்திகிரிமாஹாத்ம்யத்தில் 'இப்படி பெருமாளுடைய குணங்களை வகையும் தொகையுமாக வகுத்து அநுபவிக்கிற ஸர்வதோமுகனுன ப்ரஹ்மா மேன்முகத்தாலே யஜ்ஞவாடத்தின் மேல்பாதியிலே வெஃகாவில்துயிலமர்ந்த வேந்தையும் கீழ்முகத்தாலே உத்தரவேதியிலே நின்றருளின பெருமாளையும் சேர அநுபவித்து இங்ஙனே அநுஸந்தித்தான் — ஏகம் வேகவதீமத்யே ஹஸ்திசைலே ச த்ருச்யதே | உபாய பலபாவேன ஸ்வயம்வ்யக்தம் பரம் மஹ: || என்று' என்றிருக்கிறது. இவ்விடத்தில் ப்ரஹ்மா 'ஏகம்............ மஹ:' என்று அநுஸந்தித்தான் என்றிருப்பதால் இந்தச்லோகம் ஸ்ரீ தேசிகனுடையதன்றென்று தோன்றுகிறது. ஸ்ரீதேசிகனுடையதாகவிருந்தால்தன்னுடைய ச்லோகத்தை வாதனுடைய அவதாரகாலத்தில் ப்ரஹ்மா அநுஸந்தித்ததாக அருளிச்செய்வது பொருந்தாததன்ருே? இதே ஸ்ரீ ஹஸ்திகிரி மாஹாத்ம்யத்தில் கொஞ்சம் மேலே 'அப்பொழுது ப்ரஹ்மாவும்.........விண்ணப்பஞ்செய்தான். 'வைகுண்டே து யதா லோகே யதைவ க்ஷீரஸாகரே | ததா ஸத்யவ்ரதக்ஷேத்ரே நிவாஸஸ்தே பவேதிஹ || ஹஸ்திசைலஸ்யசிகரே ஸர்வலோகநமஸ்க்ருதே| புண்யகோடிவிமானேஸ்மின் பச்யந்து த்வாம் நராஸ்ஸதா || என்று' என்கிறவாக்யம்முன் உதாஹ்ருதவாக்யம்போல் இருக்கிறது. இவ்விடத்திலிருக்கும் 'வைகுண்டே து' இத்யாதிச்லோகங்கள் ஸத்யவ்ரதக்ஷேத்ரமாஹாத்ம்யச்லோகங்களே. ஆகையால் ஸ்ரீ தேசிகனுடைய ஸ்ரீ ஹஸ்திகிரிமாஹாத்ம்ய ரஹஸ்யத்திற்கு மூலமான ப்ரஹ்மாண்டபுராணுந்தர்கதஸத்யவ்ரதக்ஷேத்ர மாஹாத்ம்யத்தி லிந்தச்லோக மிருக்கவேண்டும். காஞ்சியில் அச்சிட்ட ப்ரஹ்மாண்டபுராணுந்தர்கத ஹஸ்திகிரிமாஹாத்ம்யத்தில் 'வரம் வரய' இத்யாதி ச்லோகங்கள்போல் இந்தச்லோகம் காணப்படவில்லை. மதராஸ் முதலியஸ்தலங்களிலுள்ள புத்தகசாலைகளிலுள்ள தாளகோசங்களைப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

முக்கிய அறிவிப்பு

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை மேற்கண்ட விலாஸத்திற்கே அனுப்பவேண்டும். சந்தாதாரர்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் ஷை விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லாக் கடிதப்போக்குவரத்துகளும் மேலே கண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும். பணம் அனுப்பும்போது உங்கள் **சந்தா நெம்பரையும்,** மணியார்டர் கூபனின் பின்பக்கத்தில் **விலாஸத்தையும் மறவாமல் நன்ருகத்தெரியும்படி எழுதவேண்டும்.**

பத்ரிகையில் ப்ரசுரிக்கவேண்டிய வ்யாஸங்கள் செய்திகள் முதலியவைகள் கீழ்கொடுக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்பவேண்டும்.

ஸம்பாதகர், "ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா"
ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம், செங்கல்பட்டு ஜில்லா.

ஸ்ரீ:

ஓ ரொ ன் று தா னே (3)

‘பாட்டுக்குரிய பழையவர் மூவரைப் பண்டொருகால்
மாட்டுக்கருள்தருமாயன் மலிந்து வருத்துதலால்
நாட்டுக்கிருள் செக நான்மறை யந்தி நடை விளங்க
வீட்டுக்கிடைகழிக்கே வெளிகாட்டுமம்மெய்விளக்கே.

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தின் 30-வது அதிகாரமான ஆசார்யக்ருத்யாதிகாரத்தில் திகழும் திருப்பாசுரமிது. அவ்வதிகாரார்த்தத்தை ஸங்க்ரஹிக்கும் பாசுரத்துக்கு முன்னே நிற்பதால் முப்பத்திரண்டான முத்தமிழ் சேர்ந்த மொழித்திருவில் சேராத ஒரு தனித்திரு மொழி. இதன் பொழிப்புரை பின்வருமாறு.

எம்பெருமானைக்குறித்துக் கானம் செய்யத் தகுதி (அதிகாரம்) பெற்றமையால் அதற்கு உரிமை யுடைய ப்ராசீநமான மூவர்களை (முதலாழ்வார்களை) பசுக்களுக்குக் கிருபை புரியும் ஆயன் (கோபாலன்: திருக்கோவலூர் ஆயன்) மிகவும் எளியவனாகி (ஸுலபனாகி) அம்மூவரைக் கசக்கி நெருக்கியபடியால், உலகத்திலுள்ள அஜ்ஞாநமாகிற இருள் நீங்கவும், வேதாந்தத்தின் போக்கு நன்கு விளங்கவும், ஒரு வீட்டின் இடைகழியில் (ரேழியில்) ஒளி வீசியது ஒரு ஸத்யதீபம்.

முதன்முதலாக இப்பாசுரத்தில் ஒரு அத்புத ரஸம் தோற்றுகிறதைக்கவனிக்கவேண்டும். உலகரீதியில் ஸாமாந்யமாக எந்த இடத்தில் ஒரு தீபம் ஏற்றப்படுகிறதோ அந்த இடத்தில் இருள் நீங்கும், வெளிச்சம் தோன்றும். இந்த விளக்கு ஏற்பட்டு வெளி (ப்ரகாசம்) காட்டியது ஓரிடைகழியில்; இருள் நீங்கியது நாட்டுக்கு; வெளிச்சம் வீசியது நான்மறையந்தியில். நடையென்றாலும் இடைகழியென்றாலும் தேஹளி (ரேழி) யைக் குறிக்கும். ஒரு வீட்டின் இடைகழியில் வெளிகாட்டிய விளக்கு வேறுப்ரதேசத்தின் நடையில் (இடைகழியில்) வெளிச்சம் வீசியதாம். சொற்சித்திரமான ச்லேஷையும், இயற்கையில் இல்லாத விசித்ரமும் தோற்றப் பாசுரமமைந்திருக்கிறது.

இந்தப் பாசுரத்தில் எந்த விளக்குப் பேசப்பட்டிருக்கிறதென்று ஆராயப்புக்கால் மூன்று யோசனைகள் தோன்றக்கூடும். (1) பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் முறையேயேற்றிய இரண்டு தீபங்களாயிருக்கலாம். மறையின் குருத்தையும் செந்தமிழ்தன்னையும் கூட்டி ஒன்றத்திரித்து அன்று பொய்கைப்பிரான் வருத்தும் புறவிருளை மாய்க்க ஏற்றிய தீபம் ஒன்று. இறைவனைக் காணுமிதயத்திருள்கெட பூதத்தாழ்வார் ஏற்றிய ஞானச்சுடர்விளக்கு ஒன்று. ஆனால் இவைகளிரண்டும் நெய் விளக்குகள். வார்கடலே நெய்யாகக்கொண்டு ஏற்றப்பட்டது பொய்கையார் தீபம். மற்றையது ஆர்வமே நெய்யாக ஏற்றப்பட்டது. இப்பாசுரத்தில் பேசப்படுவதோ மெய்விளக்கு—நெய்விளக்கன்று. ‘தீவெந கெந ஹ்ருதி தீவ்யமாவள நிஸீயெ’ என்று துடங்கும் தேஹளீஶஸ்துதி ச்லோகத்தில் அவ்வாழ்வார்கள் ஏற்றிய தீபம் கொண்டாடப்பட்டிருக்கிறது ஸ்வாமி தேசிகனால். மேலும் அதிகாரத்தின் இறுதிப் பாசுரத்தில் ஆசார்யர்கள் ஏற்றும் அழியா விளக்குப் புகழப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் பாட்டுக்குரிய பழையவர் மூவரும் ஸம்பந்தப்பட்ட மெய் விளக்கு. பேயாழ்வார் மற்ற இருவரைப் போல் விளக்கேற்றியதாகத் தெரியவில்லை. இவை போன்ற காரணங்களால் ஆழ்வார்கள் இருவர் ஏற்றிய விளக்குகள் விஷயமல்ல இப்பாசுரத்துக்கு என்று தெளியலாம்.

(2) ஆழ்வார்கள் மூவரும் அருளிச் செய்திருக்கும் மூன்று திருவந்தாதிகளை மெய் விளக்காகப் போற்றிப் பேசியிருக்கலாம் என்ற ஒரு யோசனை எழுகிறது. இது அதிகாரத்தின்

முடிவில் இப்பாசுரத்துக்கு அவ்யவஹிதமாக (அடுத்தபடியாக) க்காணும் வாக்யபங்க்திகளாலே உறுதி பெறுகிறது. 'பெருமாள் மறவாமல் காத்துப் பிழையறப் பேசுவித்த பாசுரங்கள்' என்ற உக்திகள் அங்கே திகழ்கின்றன. அது இன்றுமட்டும் நிகழ்ந்ததொன்றல்ல; பண்டொருக்காலே நிகழ்ந்தது என்று ஐதிஹ்யம் காட்டியருளுவாராய் இப்பாசுரத்தை யமைத்திருக்கிறார் ஸ்வாமி என்று நினைக்க இடமிருக்கிறது. பாசுரத்தில் கையாளப்பட்ட சொற்களெல்லாம் இவ்வபிப்ராயத்தையே வலியுறுத்துவன. இவ்வந்தாதிகளைப் பாடியவர்கள் பாட்டுக்குரியவர்கள் எனப் பாராட்டப் பெறுகிறார்கள். பழையவர் என்றதால் ஆதிகவிகள் என்றதாயிற்று. வடமொழிக்கு ஆதிகவி வால்மீகியென்றால் தமிழுக்கு ஆதிகவிகள் இம்மூவர். ஒருவர் கவிஞர் போரேறு; ஒருவர் பெருந்தமிழர்; ஒருவர் தமிழ்த்தலைவர். 'இன்கவிபாடும் பரமகவிகள்' என்று நம்மாழ்வாரும், 'செந்தமிழ் பாடுவார்' என்று கலியனும் ஏற்கனவே இம்மூவரைப் போற்றிப்பேசியிருக்கிறார்கள். ஸ்வாமியும் 'கவிமுக்யர்கள், கவீந்த்ரர்கள்' என்றெல்லாம் தேஹளீசஸ்துதியில் இவர்களைக் குறித்துப் பேசி மகிழ்கிறார். நிகமனச்லோகத்தில் ஆதிபக்தர்கள் என்றே இவ்வாழ்வார்களை வ்யவஹரித்தருளுகிறார். இவ்வபிப்ராயங்களையெல்லாம் திருவுள்ளத்திற் கொண்டு 'பழையவர்' என்ற பதப்ரயோகம் அவர்கள் விஷயத்தில் ஏற்பட்டிருக்கவேண்டும். 'பாட்டுக்குரிய பழையவர்' என்பதால் ஸாமகானம் செய்தும் பல்லாண்டே பல்லாண்டும் பாடியும் வரும் விண்ணவர் குழாங்களாகிய நித்யஸூரிகளில் மூவரென்றும் வ்யாக்யாதாக்கள் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள்.

பண்டொருகால் — முன்பு ஒரு காலவிசேஷத்தில், ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத் துவக்கிய ஓரிரவைப் போல் பெருமை பெற்று ஒப்பற்ற காலம். 'க்ஷ்வந க்ஷபாயாம்' என்று தேஹளீசஸ்துதி ப்ரயோகமும் காண்க.

மாட்டுக்கு அருள் தரும் ஆயன் — ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை அப்படியே யடியொற்றியது. இந்த நிகழ்ச்சியைப் பாராட்டப்புக்குப் பொய்கையாழ்வார் முதற்றிருவந்தாதியில் பாடிய பாசுரம் பின்வருமாறு:

'நீயும் திருமகளும் நின்றாயால், குன்றெ
டுத்துப்பாயும்பனிமறைத்த பண்பாளா—
வாசல்கடைகழியாய் உள்புகாய்க் காமர்
பூங்கோவல் இடைகழியே பற்றியினி'

குன்றெடுத்துப்பாயும் பனிமறைத்த பண்பையெண்ணித்தான் 'மாட்டுக்கருள்தரும் ஆயன்' என்று பெருமாளை இங்கே வர்ணித்தது. மலிந்து வருத்தினமையும் 'நீயும் திருமகளும்' பாசுரத்திலிருந்துதான் வெளியாகிறது. பெருமாள் பிராட்டிஸமேதராக அழகிய திருக்கோவலூர் இடைகழியைப் பற்றி, வாசலிலும் போகாமல் உள்ளேயும் போகாமல் ஆழ்வார்களை நெருக்கியபடி. இந்த ஸம்மர்த்தத்தால் மெய்விளக்காம் திவ்யப்ரபந்தங்கள் வெளிவந்தன. இப் பிரபந்தங்களை 'நூதன சர்க்கரை'யென தேஹளீசஸ்துதியில் அநுபவித்து இன்புற்ற ஸ்வாமி இங்கே அவற்றை மெய்விளக்கெனப் பேசி மகிழ்கிறார். சதுர்முக ப்ரஹ்மாவை முதலில் உண்டாக்கி அவருக்கு வேதங்களைக் (கைவிளக்காகக்) கொடுத்தருளினார் என்று வேதம் ஓதுகிறது. இதை தயாசதகத்தில் ஸ்வாமி அழகாகப் பாராட்டுகிறார்.

'கநாஹணலிஶாவிஷ்டெந
ஸ்ரீயாகாந்தெந ஸஹிதஷெஹா |
ஶயவஸி தஃ ப்ரஜாநாம்
ஶாஸ்த்ரமயெந ஸ்திரப்ரதீபெந ||' என்று.

அது ஸ்திரப்ரதீபமானதேயன்றி ஸத்யப்ரதீபமாகவில்லை. உண்மையை மறைத்துப் பேசிய மறையானபடியால் முதலாழ்வார்கள் திருவாக்கிலிருந்து அவதரித்த இப்பிரபந்தங்களே மெய்விளக்கு. ஆகவேதான் நாட்டாருக்கு இதுவரை தொடர்ந்து வந்த அஜ்ஞான இருள் இப்போதுதான் நசித்தது. நான்மறையந்தி— அந்த ஸ்திரப்ரதீபத்தின் ப்ரஹ்மகாண்டமான உபநிஷத்பாகத்தின் நடை (போக்கு) இப்போதே உள்ளபடி விளங்கிற்று. 'பொருள்மிகுத்த மறைவிளங்கப் புவியோருய்யத்… ……திருவிளக்காமென வையந்தகளிநூறுஞ்

செழும்பொருள்' என்று பிரபந்த ஸாரத்தில் பொய்கையாழ்வார் விஷயமான பாசுரமும், 'செய்யதமிழ்மாலைகள் நாம் தெளிய வோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே' இத்யாதி அருளிச்செயல்களும் நான்மறையந்தி நடைவிளங்க வென்பதை வ்யாக்யானஞ்செய்தருளுமவை. 'அந்தமிலா வாரண நாலாகி நின்றவதன் கருத்தை ஆழ்வார்களாய்த்தெடுத்துச் செந்தமிழாலருள்செய்த'மையைப்பாராட்டித்தானே பிரபந்தஸாரம் நிகமிக்கிறது. திருவிக்கிரமன் உயரத்தூக்கிய திருவடியிலிருந்து 'த்ரிபதகா' என்ற மூன்று ப்ரவாஹங்களுடைய கங்கை உத்பத்தியாகியது. அந்த கங்கையோ ப்ரஹ்மாவின் கமண்டலு ஸம்பந்தமும் பசுபதியின் ஜடாஸம்பந்தமும் பெற்றமையால் களங்கமுள்ளதாயிற்று. ஆகவே மீண்டும் 'வேதாபஹாரகுருபாதகதைத்யபீடா வாதம் வ்யாபேண தநுஸஞ்சஹ்ருஜீவாவ ஹரிய:' என்ற கணக்கிலே மீண்டும் ஒரு ஸ்ரோதஸ்த்ரயமாக அவர்கள் வாக்கினின்று வெளியாகி முன்பிருந்த களங்கம் நீங்கித் தெளிவாக விளங்கினதுபோல், நான்மறைகளும் ஸாமான்யபுத்திஜநகங்களான 'ஸத்' முதலிய ஶப்தங்களாலும் தத்வாந்தரப்ரமத்தை விளைவிக்கக்கூடிய சிவாதி ஶப்தங்களாலும் ஏற்படக்கூடிய கலக்கங்களெல்லாம் கழிந்து உண்மைப் பரம்பொருளான ச்ரிய:பதியை விளக்கின, ஆழ்வார்கள் திருவந்தாதிகளோடு ஒரு வேதாந்தமாக ஐககண்ட்யம் செய்து பார்த்தபோது. பரதத்வம் இவ்வந்தாதிகள் அவதரித்த பிறகுதான் யதாவஸ்திதமாகப் பிரகாசித்தது. 'சுயஞ்நவஸந்தெளு நாஷிஹஸெஷ்டய ப்ராவஷிஸஷிதமிஜ' தத்வாணுர் தேஹளீசனும். ஒரு நடையில் (ரேழியில்) ஆவிர்ப்பவித்து நான்மறையந்தி நடையை விளக்க வைத்தார். உலகளந்த உத்தமன் ஒரு ரேழிப்பெருமாளானதால் உலகம் பெற்ற பேறு இது.

இவ்வளவு பெருமை வாய்ந்தமையால்தான் இவ்வந்தாதிகள் வீட்டுக்கிடைகழிக்கே வெளிகாட்ட வல்லமை பெற்றன. வீடு என்றால் மோக்ஷம். த்ருப்தப்ரபந்நனுக்கு தேஹாவஸாநத்தில் மோக்ஷம் ஸித்தம். ப்ரபத்யநுஷ்டாந காலம்முதல் தேஹாவஸாநத்திலே ஏற்படும் மோக்ஷம்வரையில் உள்ள காலம் இடைக்காலம். அதைத்தான் 'வீட்டுக்கிடைகழி' யென்று இங்கே ஸ்வாமி நிர்த்தேசித்தருளுகிறார். உத்தரக்ருத்யம் ஸரிவர அநுஷ்டிக்கவேண்டிய போது 'ஸந்தோஷாயஞ் விஶ்ரமதி ஸாஹஸ்ர ஸஹஸ்ரஶ்யாதவிஷ்யாம் நித்யம் ஸூக்தெ நிமஜ்ய திவ ஸாக்ஷ ஸம்வ்யாஹ்ருதாநி' என்ற கணக்கில் போதுபோக்க உதவுவனவல்லவா திவ்யப்ரபந்தங்கள்? இந்த உத்தரக்ருத்யத்தில் இருள்புகாவண்ணம் நம்மைக்காத்து உண்மையொளிவீசி உபகரிப்பன ஆழ்வார் அருளிச்செயல்கள். அவைகளே நமக்கு 'வானேரப்போமளவும் வாழ்வு' என்பது தேசிகோபதேசம்.

(3) ஆழ்வார்கள் இருவர் அன்று ஏற்றிய இரு விளக்குகளும்; மூவரும் ஏற்றிய அழியா விளக்குகளாகிய திருவந்தாதிகளும் நிற்க, இந்தப்பாசுரத்தில் ப்ரதிபாதிக்கப்படும் மெய்விளக்கு ச்ரிய:பதியே என்றும் சொல்லலாம். உண்மையில் அன்று திருக்கோவலூரிடைகழியில் காணப்பட்டது. தன்னைக்காணக்கொடுத்தது திருமாலாகிய திருவிளக்கேயன்றோ? அதுவரை பெருமாளையும் பிராட்டியையும் ஒன்று சேர்த்துக் கண்ட பேர்களுண்டோ? புருஷஸூக்தம் பிராட்டியைப் பத்நியாகக்கண்டது. ஸ்ரீஸூக்தம் பெருமாளை அவளுக்குப் பதியாகக் கண்டது. மிதுனத்தைக் கண்ட பேர்களுமில்லை. கண்டுவிண்டபேர்களுமில்லை. 'என்னாழிவண்ணன்பால் இன்று திருக்கண்டேன்' என்றும், 'மலராள் தனத்துள்ளான் தண்டுழாய்மார்பன்' என்றும்சொல்லும்படி ஒருவரில் மற்றொருவரை நேராகக்காணும்படி தன்னை ஸர்வேச்வரன் அதுவரை யாருக்காவது காட்டிக்கொடுத்தானா? பேயாழ்வார் விஷயமான பிரபந்தஸாரப் பாசுரத்தில் இந்த அபூகபூர்வமான நிலையை வெகு அழகாகக் காட்டுகிறார் தேசிகோத்தமன். 'துன்னிய பேரிருள் நீங்கச் சோதிதோன்றச், சேமமுடன் நெடுமாலைக் காணப்புக்குத் திருக்கண்டேனென வுரைத்த தேவே' யென்று விளிக்கிறார் பேயாழ்வாரை. அவர் ஜ்ஞாநசக்தியால் யோகசக்தியில் ஸாக்ஷாத்

கரிக்க முயன்றது நெடுமாலை—நேரில் கண்டதோ திருமாலை. தோன்றிய சோதி திருமாலெனும் சோதி. அதைத்தான் இங்கே மெய்விளக்கு ‘இடைகழிக்கே வெளிகாட்டுமிம் மெய்விளக்கு’ என்று பேசுகிறார். ஏற்றப்படாதபோதும் தீபம்தீபந்தான். ஏற்றப்பட்டபிறகு சுடரோடு ப்ரகாசிப்பது தான்மெய்யான தீபம். பெருமாள் மட்டும் தனிப்பட த்யானிக்கப்படும்போது ஏற்றாத தீபம் போன்றவர் அவர். பிராட்டி ஸமேதராக த்யானிக்கப்படும்போதோ, பார்க்கப்படும்போதோ மெய்விளக்காகத் தோற்றுவர். ‘தீபஸ்யைவ ஜகதாம் தயிதா ருசிஸ்தே தீப்யந்த்ஸ்ஸ ப்ரதிநிவர்த்ய தமிஸ்ரம் யதாவாஹ்யாம்’ என்ற ஶரணாகதிதீபிகா ச்லோகத்திற் சொன்னமாதிரி இந்த பிராட்டியாகிய காந்தி வீசும் பெருமாளாகிற தீபம்தான் நாட்டுக்கு இருளைப் போக்கித் தருவது. தீபமில்லாமல் காந்தியிருக்கமுடியாது. காந்தியில்லாத தீபத்தால் எவருக்கு மெப்பயனுமிலது. ஆகவே தான் ‘ஸ்வாமீவாஹாஃ ஸதிவிஷவலு ஸ்வத்ருஷ்யம் ஸுகநாயம்’ என்று தொடங்கிப் பூர்வ பக்ஷங்களையெல்லாம் கழித்து ‘ஶமவதியாவாம் ஷம்வதீ தைவதம் ந:’ என்று ஸித்தாந்தித்துப் போந்தது ஸ்ரீஸ்துதியில். ஶாஸ்த்ரமாகிற கைவிளக்கையெல்லாம் பொய்விளக்காக்கும் நிலையில் மெய்விளக்காத் தோன்றிய திருமால் முதல் முன்னம் வெளிப்பட்டது திருக்கோவலூரிடைகழியில். வேதம் அபௌருஷேயம். இன்ன காலத்தில் இன்னார் சொன்னது, இன்னார் முன் அரங்கேற்றப்பட்டது என்று கண்டறிய இயலாது. வேதபுருஷன் ராமபிரானாக அவதரித்தபோது வேதம் ஸ்ரீமத்ராமாயணமாக அவதரித்தது. அதற்குக் கர்த்தா வால்மீகிபகவான். ஆனால் அது பெருமாள்மட்டும் எழுந்தருளியிருந்த ஸதஸ்ஸில் அரங்கேற்றப் பெற்றது. பிராட்டி ஸாந்நித்யம் அப்போது இல்லை. ‘ஸீதாயாஶ்சரிதம் மஹத்’ என்ற பெருமை பெற்றபோதும் திவ்யதம்பதிகளது அபிநந்தனத்தைப் பெறவில்லை அவ்விதிஹாஸ ரத்னம் கூட. பெருமாள் அர்ச்சையில் எழுந்தருளிய தசையில் அவருடைய ஸ்வரூப ரூப குணவிபவங்களைப்புகழ்ந்து பேச வேதம் அருளிச்செயல் வடிவத்தில் அவதரித்தது. இந்தத் தசையில்தான் அதற்கு திவ்ய தம்பதிகளது ஸாந்நித்யமும் பூர்ண ஆபிமுக்யமும் கிடைத்தன. அத்தம்பதிகளே ப்ரேரிதாக்கள். அவர்களே அப்பிரபந்தங்களைத் தம் திருமுன்பே அரங்கேற்றிக்கொண்டார்கள். வக்தா ச்ரோதா வசனவிஷயம் அனைத்தும் ஒரு மிதுனமே என்ற நிலையில் ஆழ்வார்களைக்கொண்டு பேசுவித்தும், இன்பமாகக்கேட்டு ஆனந்தித்தும், ப்ரதிபாத்யப்பொருள் தாமேயென்றும் வெளிக்காட்டிய மெய்விளக்கு அத்திருமாலே. அத்திருமால் தலைக்கொண்ட நங்கட்கு எங்கே வரும் தீவினையே யென்று மாலுற்று தேசிக வள்ளல் பாடியருளிய இப்பாசுரம் ஒன்றுமே யமையாதோ?

ஸ்ரீ அஹோபிலமடம் 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் வார்ஷிக ஆராதனம், காருகுறிச்சி.

இவ்வூர் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸன்னிதியில் ஜய வருஷம் ஐப்பசி மாதம் 15வ (30-10-54) யன்று ஸ்ரீஅஹோபிலமடம் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தாரயெழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் வருஷாராதனல் ஸ்ரீ G. கோபால ஸ்ரீநிவாஸாசாரியரால் நடத்திவைக்கப்பட்டது. ஸேவை, சாற்றுமுறை, ஸம்பாவனை, ஸ்ரீபாததீர்த்தம் ஆனதும் கோஷ்டிக்கு சந்தன தாம்பூலத்துடன் சித்ராங்கங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

G. கோபாலஸ்ரீநிவாஸாசார்யர்,
கௌரவ ஏஜண்ட்.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ அஹோபிலமடம் 34, 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்களின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்.

கீழ்வானம் வெள்ளென்று, கீசுகீசென்று ஆனைச்சாத்தன் கலந்துபேச புள்ளும்சிலம்பி 'கொழு மலரணவிக் கூர்ந்தது குணதிசை மாருதம்' என்கிறபடி மந்தமாருதம் வீச ஹரிர் ஹரி: என்று பேரரவத்துடன் சடக்கென்றெழுந்து காலைக்கர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, ஸ்ரீ அழகியசிங்கர்விச்வரூபாராதநத்திற்கெழுந்தருளியாயிற்று. ஸ்ரீ அழகியசிங்கருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தில் கூடி கலந்து உள்ளம் குளிர்ந்து பவநாசினியான ஸ்ரீ பாதோதகத்தால் பாவனர்களாய்ப்போக எண்ணங்கொண்டு சென்னை மதுரை முதலிய பெரிய நகரங்களிலிருந்தும் மற்றுமுள்ள சிறிய நகரங்களிலிருந்தும் வைதிக லௌகிகஸ்வாமிகள் திரள்திரளாக குழுமினின்றனர். அபிகமனமங்களஹாரத்தி நடந்ததும் தீர்த்தம் ஸ்ரீ சடாரி ஸம்பாவனை ஸ்ரீ பாததீர்த்தங்கள் க்ரமமாக நடந்தன. ஸ்ரீ சடாரி யானதும் ஸ்ரீமாலோலன், திருவுள்ளூர் ஸ்ரீ எவ்வுள்கிடந்தான், ஸ்ரீதசாவதாரன் முதலிய எம்பெருமான்களுடைய மாலை பரியட்டங்கள் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஸமர்ப்பிக்கப்பட்டன. பிறகு கோஷ்டி விநியோகங்கள் பண்ணப்பட்டன. சேலத்திலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் அதிவிலக்ஷணர்களாயும், மிகவும் பக்திச்ரத்தைஉடையவர்களாயும், பகவத்பக்தி, ஆசார்ய பக்தி, பாகவதபக்திமுதலியவைகள் குடிகொண்டவர்களாயும் காணப்பட்டார்கள். ஸ்ரீஅழகியசிங்கர்சேலத்திற்குச் சென்றிருந்தவர்கள் யாவரையும் தத்ததிகாராநுகுணமாக மந்தஸ்மித மதுராலாபாதிகளால் விசாரித்து பலமந்த்ராக்ஷதைகளும் அநுக்ரஹித்தாயிற்று. ஸ்ரீ அழகியசிங்கர்நிய மநத்தின் பேரில் ஸ்ரீ. உப. வித்வான், ஸ்ரீகார்யம், தையார், ஜோஸ்யம், ரங்காசார்யர் ஸ்வாமி மஹோத்ஸவத்திற்கு குழாங்களாய் கூடியிருந்த உள்ளூர் வெளியூர் ஸ்வாமிகளை ஆபாலவ்ருத்தர்களும் ஆநந்திக்கும்படி அதிஸந்தோஷத்துடனும் அத்யுத்ஸாஹத்துடனும்அவரவர்களுக்குவேண்டியஸௌகர்யங்களைப் பண்ணிவைத்தார். வழக்கம்போல் ராத்ரி டோலோத்ஸவம் நடந்தது. அப்பொழுது ஸ்ரீஅழகியசிங்கர் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளி யிருக்கவேணுமென்று எல்லோரும் ஸ்வஸ்தி பாடினார்கள். கோஷ்டிக்கு சந்தண தாம்பூலங்களெடுக்கப்பட்டு உத்ஸவம் இனிது நடந்தேறியது.

ந. க்ரு.

காஞ்சீபுரம்

நிகழும் (29-11-54) ஜய வரு கார்த்திகை மாதம் 14உ திங்கட்கிழமை ஸ்ரீஅஹோபில மடம் 43-வது பட்டம் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வார்ஷிக திருநக்ஷத்ரம் இவ்வூர் வாஸிகளான பல ப்ரமுகர்களைக் கொண்டு வெகு விமர்சையாக நடத்தப்பட்டது. அன்று காலை 6-30 மணிக்கு இவ்வூர் ஸ்ரீஅஹோபில மடத்திலிருந்து ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுருவப்படத்தை அலங்கரித்து கேடயத்திலெழுந்தருளப்பண்ணி ஸ்ரீதேவப்பெருமாள் ஸன்னிதி நான்கு மாடவீதிகளிலும் யானை, குதிரை, சத்ர சாமரங்களுடனும்ஷ்டிபாடசாலை பிள்ளைகளைக்கொண்டு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரபாடபடனத்துடனும் வீதி ப்ரதக்ஷிணம் நடத்தப்பட்டது. அச்சமயம் ஸ்ரீகாஞ்சீ ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அநுக்ரஹமாக பிள்ளைகளுக்கு துணிகள் வழங்கினார்கள். தவிர பிள்ளைகளின் போஜனத்திற்காக 5படி அரிசியும் கொடுத்தார்கள். ஸுமார் 9 மணிக்கு ஊர்வலம் ஸ்ரீஅஹோபிலமடம் வந்து சேர்ந்தது. பிறகு இவ்வூர் ஹெல்த் ஆபீஸர் ஸ்ரீமான் K. ராமஸ்வாமி அய்யங்கார் தலைமையில் ஸ்ரீ அழகியசிங்கர் ப்ரபாவத்தைக்குறித்தும், பாடசாலையின் அபிவ்ருத்தியைக்குறித்தும் உபந்யாஸம் செய்யப்பட்டு தத்யவாதத்திற்குப் பிறகு ஸபை கலைந்தது. அச்சமயம் ஸ்ரீ. உப. திருமணி ஸுந்தராசாரியர்

பாடசாலைக்கு ஒரு பீரோவும், பிள்ளைகள் உட்கார 7 பலகைகளும் நன்கொடையாகக் கொடுத்தார். ஸ்ரீஸன்னிதியில் ஸ்ரீஅழகிய சிங்கர் ஸம்பாவனை வரையில் நடத்தப்பட்டு தீர்த்தப்ரஸாதவிநியோகங்களுடன்கோஷ்டி இனிது முடிவடைந்தது.

அத்தி க்ருஷ்ணமாசாரியர்,
ஹெட்மாஸ்டர்,
ஸ்ரீஅஹோபிலமடம் பாடசாலை.

வில்லிவாக்கம்

(வில்லிவாக்கத்திலுள்ள ஸன்னிதிசிஷ்யர்கள் ஒன்றுசேர்ந்து புரட்டாசிக் கேட்டைத் திருநாளைக் கொண்டாடினார்கள். திருநாராயண ஐயங்கார் க்ருஹத்தில் ஸேவாகாலம், சாற்றுமுறை, ஸம்பாவனைகளெல்லாம் நடந்து பின்னர் ஸ்ரீ. உப. அழிசூர் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியால் 'ஆசார்யர்களின் உபகாரம்' என்ற விஷயம் உபந்யஸிக்கப்பட்டது. கோஷ்டிக்கு சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பட்டன.)

கார்த்திகைப் பூராடத்தன்று காலையில் வடுவூர் ஸ்ரீ. உப. திருவேங்கடத்தய்யங்கார் க்ருஹத்தில் ஸம்பாவனையும், ராத்ரி ஸ்ரீ. உப. வடுவூர்ரங்கநாதாசார்யஸ்வாமியின்(மாம்பலம்) 'ஆசார்ய ப்ரபாவம்' என்கிற விஷயம் பற்றி உபந்யாஸமும் நடந்தன. நம் ஸ்ரீ அழகியசிங்கர் பள்ளிப்பயிர்ச்சியில் தோற்றுவிக்கும் ஆர்வத்தை ஆஸ்திகர்களனைவரும் பயன் படுத்திக் கொண்டு மேன்மேலும் வைதிகதர்மமும் நம் ஸ்ரீராமாநுஜஸித்தாந்தமும் வாழையடிவாழையாக வளர வேண்டுமென ப்ரார்த்திக்கப்பட்டது.

திருநாராயண ஐயங்கார்.

காருகுறிச்சி

இவ்வூர் கண்ணன்ஸன்னிதியில் ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் வருஷ திருநக்ஷத்ர மஹோத்ஸவம் 29-11-54 திங்கட்கிழமை யன்று ஸ்ரீ அஹோபில மடம் கௌரவ ஏஜண்டு ஜி. கோபால ஸ்ரீநிவாஸாசாரியரால் செய்து வைக்கப்பட்டது. காலையில் கண்ணனுக்கும் ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கும் விசேஷ திருமஞ்சனம் நடந்தது. பிறகு ஸம்பாவனை ஆனதும் ஸ்ரீ பாதுகா தீர்த்தம் கோஷ்டிக்கு ஸாதிக்கப்பட்டது. நிவேதனமான விசேஷ தளிகை ப்ரஸாதம் கோஷ்டிக்கு விநியோகம் செய்யப்பட்டது. பக்கத்து க்ராமங்களிலிருந்தும் ஸ்வாமிகள் வந்து உத்ஸவத்தில் கலந்துகொண்டார்கள்.

ஷை ஸன்னிதியில் ஸ்ரீ அஹோபில மடத்தில் 34-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளி யிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீசடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன் வார்ஷிக திருநக்ஷத்ரம் ஜி. கோபால ஸ்ரீநிவாஸாசாரியராலும் ஷை யார் தம்பி கோபாலக்ருஷ்ணமாசாரியராலும் நடத்திவைக்கப்பட்டது. அன்று விசேஷ ததீயாராதனம் நடந்தது.

G. கோபால ஸ்ரீநிவாஸாசாரியர்,
கௌரவ ஏஜண்டு.

திருக்குறுங்குடி

29-11-54 திங்கட்கிழமை யன்று இவ்வூர் ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் வார்ஷிக திருநக்ஷத்ரம் கொண்டாடப்பட்டது. ஸம்பாவனை ஸ்ரீபாததீர்த்தம் ஆனதும் கோஷ்டிக்கு ப்ரஸாதம் விநியோகிக்கப்பட்டது.

G. கோபால ஸ்ரீநிவாஸாசாரியர்,
கௌரவ ஏஜண்டு.

ஸ்ரீவில்லிபுத்தூர்

ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீவண்சடகோபஸ்ரீவீரராகவசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் கார்த்திகை மீ 14உ கொண்டாடப்பட்டது. ஸம்பாவனையும், கோஷ்டிவிநியோகமும் நடந்தபிறகு உள்ளூர் ஏஜண்டு ஸ்ரீசக்ரவர்த்தி ஐயங்காரும், ரிடையர்ட் ஸப்ரிஜிஸ்டார் ஸ்ரீ ஸுந்தரராஜ ஐயங்காரும் சேர்ந்து ஷட்ரஸோபேதமான ததீயாராதனத்தை நடத்தி வைத்தார்கள். இதரர்களால் ராத்ரி டோலோத்ஸவம் நடத்தப்பட்டது. மறுநாள் ஸ்ரீ அத்திப்

பட்டு அழகியசிங்கர் திருநக்ஷத்ரம் ஆராதகர் சேஷ ஐயங்காரால் சாற்றுமுறை, ஸம்பாவனை கோஷ்டிகளுடன் விசேஷமாக நடத்தப்பட்டது.

சேஷ ஐயங்கார்.

திருவனந்தபுரம்

இப்பவும் கார்த்திகைமீ 14௳ (29-11-54) திங்கட்கிழமை பூராடத்தன்று நமது ஸம்ப்ரதாய சிஷ்யர்களின் உதவியால் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கும் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகனுக்கும் திருமஞ்ஜனமும் ராத்ரி டோலோத்ஸவமும் வெகு விமர்சையாக நடத்தப்பட்டன. அன்று ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹ ஐயங்காரானும், ஸ்ரீ ஆர். திருவேங்கடாச்சாரியராலும் வெகு விமர்சையாக ததீயாராதனம் நடத்திவைக்கப்பட்டது.

K. பத்மநாபன்.

ஸ்ரீகல்யாணபிவர்த்திநீ ஸபா, மதுராந்தகம்.

ஷை ஸபையின் சார்பில் 29-11-54ல் இப்பொழுது ஸ்ரீஅஹோபிலமடம் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோப யதீந்த்ரமஹாதேசிகனின் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. அன்றையதினம் காலை 10 மணிக்கு ஸ்ரீஅழகியசிங்கரின் திருவுருவப் படம் மாலைகளால் நன்கு அலங்கரிக்கப்பட்டு வீதி ஊர்வலமாய் கலாசாலை ப்ரார்த்தநா மண்டபத்தில் எழுந்தருளப் பண்ணப் பட்டது. ஊர்வலத்தில் கலாசாலை வித்யார்த்திகள் முன்னும் பின்னுமாக ஸ்தோத்ரபாடம் ஸ்வஸ்தி வாசனம் முதலியவற்றை சொல்லிக்கொண்டு சென்றனர். அத்யாபகஸ்வாமிகளும் ஊர்வலத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பிறகு மாலை 3 மணிக்கு ஷை ஸபையின் கூட்டம் ஸ்ரீ. உப. பாதூர், புராணம், ஸரள கவி, வ்யாகரணாத்யாபகர் ராகவாசார்ய ஸ்வாமியின் தலைமையில் கூடிற்று. அப்பொழுது எல்லா அத்யாபகஸ்வாமிகளும் ஊரிலுள்ள பல ப்ரமுகர்களும் எழுந்தருளியிருந்தனர். அத்யக்ஷஸ்வாமி ஸ்ரீஅழகியசிங்கரைப்பற்றித்தெளிவாக எடுத்துக்கூறி அதிலிருந்து மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அம்சங்களையும் எடுத்துரைத்தார். பிறகு அத்யாபகஸ்வாமிகளும் அவ்விதமே ஸ்ரீஅழகியசிங்கரின் திருக்கல்யாணகுணங்களை எடுத்துக்கூறி ஸமயங்களில் இம்மாதிரி மஹான்களை நினைத்தால் பாபம் நீங்குமென்றும், எனவே இம்மாதிரி ஸபைகள் நடத்தவேண்டியது அவச்யமென்றும் குறிப்பிட்டனர். ஸ்ரீ. உப. கே. ஸ்ரீநிவாஸதாதாசார்யஸ்வாமியும், ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியும் ஸ்ரீஅழகியசிங்கரின் பரமௌதார்யத்தைப் பற்றிப் பரக்கப்பேசினர். மாணவர்களில் சிலரும் தங்கள் க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக்கொண்டனர். பிறகு தாம்பூலம், பழம், சர்க்கரை விநியோகத்துடனும் வேத கோஷத்துடனும் ஸபை இனிது கலைந்தது.

* * * * *

(ஷை ஸபை 9-12-54ல் கலாசாலையின் முதல் கௌரவாத்யக்ஷர் ஸ்ரீ. உப. கோஷ்டீபுரம் ஸ்வாமியின் திருநக்ஷத்ரத்தைமுன்னிட்டு ஸ்ரீ. உப. வ்யாகரணாத்யாபகர், மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்யஸ்வாமி தலைமையில் கூடிற்று. அப்பொழுது அத்யக்ஷஸ்வாமியும் அத்யாபக ஸ்வாமிகளும் ஸ்வாமியைப்பற்றி நன்கு உபந்யஸித்தனர். பின்பு தாம்பூலாதி விநியோகத்துடன் ஸபை இனிது முடிவுற்றது.)

K. N. வரதராஜன், T. S. S. ராகவன்,
கார்யதர்சிகள்.

பாதூரில் ஸ்ரீமத்ராமாயண பட்டாபிஷேகம்.

பாதூர் ஸ்ரீப்ரஸன்னவெங்கடேசபெருமாள் ஸந்நிதியில் ஒரு வருஷகாலமாக ஸ்ரீ. உப. தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமியால் உபந்யஸிக்கப்பட்டுவந்த 'ஸ்ரீவால்மீகிராமாயணத்தின் பட்டாபிஷேகம் ஐப்பசிமீ 29௳ திங்கட்கிழமை அக்ரஹாரவாஸிகளால் நடத்தப்பட்டு ஷை ஸ்வாமிக்கு ஸம்பாவனைகள் செய்யப்பட்டன. மறுபடி மஹாபாரதம் ஆரம்பித்து நடந்துகொண்டு வருகிறது.

P. R. ஸ்ரீநிவாஸன்.

ஸ்ரீ:

அடியேன் பெற்ற பாக்யம்

உத்தமமான புரட்டாசித் திருவோணத்து நாளில் அவதரித்த தூப்புல்வள்ளலின் அவதார மஹோத்ஸவம் அநேக திவ்ய தேசங்களிலும் க்ராமங்களிலும் வெகு விமரிசையாக நடைபெற்று வருகின்றது. திருப்பதியில் திருவேங்கடமுடையானின் அவதார தினமும் அதுவேயாதலால் அவன் மஹோத்ஸவம் கண்டருளும்போது அவனடியாரின் உத்ஸவத்தையும் கூட நடத்துவது நன்றன்று என்று கொண்டு ஐப்பசியில் திருவோணம் முடிவாக 10 தினங்கள் ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனுக்கு உத்ஸவம் வெகு விமர்சையாக நடைபெற்று வருகிறது. இவ்வருஷம் சாற்றுமுறை உத்ஸவத்தில் அந்வயித்து ஸேவித்து ஆநந்தமெய்தும்படியான பாக்யம் அடியேனுக்குக் கிடைத்தது.

அன்று காலை மணி 6-30 க்குள் ஸ்ரீ கோவிந்தராஜன் திருவாராதனாதிகளை முடித்துக்கொண்டு ஆசார்யஸார்வபௌமனை யநுக்ரஹிப்பதற்கு ஸ்ரீபூமிஸஹிதனாய் ஸந்நிதிவீதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீதேசிகன் ஸந்நிதிக்கெழுந்தருளினார். வாயிலில் ஸ்வாமி தேசிகன் எழுந்தருளி எம்பெருமானுக்குப் பூர்ணகும்பம் ஸமர்ப்பித்து உபஹாரம் கண்டருளப்பண்ணினார். பின்பு ஸ்ரீ தேசிகனுக்கு மாலை, பரியட்டம், ஸ்ரீசடாரிகள் ஸாதிக்கப்பட்டன. தேசிகன் திரும்பி ஸேவித்தவண்ணம் முன்செல்ல எம்பெருமான் தேசிகன் ஸந்நிதிக்குள் எழுந்தருளினார். படிகளைந்து சீரிய சிங்காதனத்தில் எழுந்தருளப் பண்ணியவுடன் ஸ்ரீ அழகியசிங்கரின் உபயமாக க்ஷேமதளிகை சர்க்கரைப்பொங்கல் அமுது செய்விக்கப்பட்டு கோஷ்டிக்கு விநியோகிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீ ந்ருஸிம்ஹதீர்த்தத்திலிருந்து நன் கலங்கரிக்கப்பட்ட ஸுமார் 30 வெள்ளிக்குடங்களை ஊர்த்வபுண்ட்ரதாரிகளாயும் ஸுகந்தமால்யாநுலிப்தர்களாயும் உள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் சிரஸ்ஸில் எழுந்தருளப்பண்ணினார்கள். அப்போது முன்னால் பகவானது பரிவாரங்கள் சென்றன. அதன்பின் கஜேந்த்ரன் மேல் ஓர் குடத்தில் தீர்த்தம் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு செல்லவும் அதன் பின் ஸ்ரீவைஷ்ணவர்கள் குடங்களை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு செல்லவும் அதற்கும் பின்னால் ஸ்வஸ்திவாசனபாராயணம் செய்துகொண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுயாத்ரையாகவும் வந்தது கண்கொள்ளாக் காக்ஷியாயிருந்தது. இத் திருமஞ்சன ஊர்வலம் ப்ரதானவீதிகளிலும் மாடவீதிகளிலும் ப்ரதக்ஷிணமாக வந்து ஸ்ரீ தேசிகன் ஸந்நிதிக்கு வந்த பின்பு, வேத சாற்றுமுறையாகி, (அவ்விடத்திய வழக்கப்படி) கோஷ்டிக்கு ஸ்ரீ சடாரி ஸாதிக்கப்பட்டது. உடனே ஸ்ரீபூஸஹிதனான கோவிந்தராஜனும் நம் தூப்புற்குலபதியும் ஏககாலத்தில் திருமஞ்சனம் கண்டருளினார்கள். சறந்த நற்பாலும் தயிரும் குடம் குடமாக வபிஷேகம் செய்யப்பட்டன. அவ்வமயம் பக்தனொருவன் பெருமாளின் திவ்யகுணங்களையும், ஸ்ரீ தேசிகன் பரமபதஸோபாநத்தில் எம்பெருமானைத் திருமுடிமுதல் திருவடியளவும் வர்ணித்தபடியையும் இன்னும் பலபடியாகவும் ஸ்வாமி திருவுள்ளமும், கூடியிருந்த பக்தர்குழாமும் கேட்டாநந்திக்குமாறும் சட்டியம் கூறி ஸ்தோத்ரம் செய்தான். பின்பு சந்தனாபிஷேகத்துடன் திருமஞ்சனம் பூர்த்தியடைந்தது. மண்ணும் விண்ணுமதிரும்படி புருஷஸூக்தவொலியும் நீராட்டப்பாசுரவொலியும் ஒலித்தன.

பிறகு மாலை 4 மணிக்குத் திருப்பாவை சாற்றுமுறை நடைபெற்று விசேஷ ப்ரஸாதங்கள் கோஷ்டிக்கு விநியோகம் செய்யப்பட்டன. ஸாயங்காலம் திருமலை ஸ்ரீநிவாஸன் ஸந்நிதியிலிருந்து வந்த அப்பப்படியை மலையடி ஸமீபமுள்ள ராமன் ஸந்நிதியிலிருந்து வேத வாத்ய கோஷத்துடன் வீதிவலமாகக் கொணர்ந்தனர். கீழ்த் திருப்பதியிலுள்ள ப்ரதானமான ஸ்ரீ தேசிகஸம்ப்ரதாயஸ்தர்களது ப்ரார்த்தனைக்கிணங்க திருவுள்ளூரிலிருந்து வந்திருந்த எவ்வுள்கிடந்த எழிலரசின் மாலை திருப்பரியட்டா

திகளையும் திருவுள்ளூர் தேவஸ்தான அர்ச்சகர் வேதபாராயணத்துடனும் மேளம் முதலிய ஸகலமரியாதைகளுடனும் ஸ்ரீ அஹோபிலமடத்திலிருந்து எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்தார். இரவு 7-30 மணிக்கு உயர்ந்த திருவாபரணங்களுடனும் மிகப் பெரிய மாலைகளுடனும் பொலிந்துநின்ற குறைவொன்றுமில்லாக் கோவிந்தன் அழகிய திருக்கோலத்துடன் வீதி உத்ஸவம் கண்டருள, எதிரில் அஞ்சலி ஹஸ்தத்துடன் ஆரணதேசிகனும் திவ்யாபரணலங்க்ருதராய் எழுந்தருளினார். முன்னால் ஸ்தோத்ரபாடகோஷ்டியும், பின்னால் வேதபாராயணகோஷ்டியும் தொடர, ஆஸ்தாந நாதஸ்வரவித்வானின் ஆநந்தகரமான கானத்துடனும் ராத்ரி 12-30 மணிக்கு வீதி உத்ஸவம் முடிந்து தேசிகன் ஸந்நிதிக்குள் எழுந்தருளினார்கள். அங்கு ஸேவாகாலமாகி தளிகையமுது செய்த பின் வேதாந்தகுருவிற்கு மாலை பரியட்டம் ஸ்ரீசடாரி ஸாதிக்கப்பட்டு, திருவாய்மொழி, தேசிகப்ரபந்தம், பிள்ளையந்தாதி முதலியன சாற்றுமுறையாகி ஸ்ரீ தேசிகன்வாழித்திருநாமத்துடன் முடிவுற்றது. கோஷ்டி விநியோகமான பின்பு கோவிந்தராஜனும் தேசிகனும் ஸந்நிதிக்கு எழுந்தருளினார்கள். அங்கு கோவிந்தராஜன் ஆஸ்தானத்திற்கெழுந்தருளியதும் மற்றொருவருக்குமில்லாதபடியாக தன்னடியார் புடைசூழ, ஸந்நிதிக்குள் கர்பக்ருஹத்வாரத்தண்டையில் மங்களாசாசனத்திற்கு எழுந்தருளியிருந்தார். பெருமாளுக்கு உபஹாரம்சண்டருளப்பண்ணி கற்பூரஹாரத்தியானவுடன் பெருளிடமிருந்து மாலை, பரியட்டம், ஸ்ரீசடாரிகளை தேசிகனுக்கு ப்ரஸாதித்ததும் கற்பூரஹாரத்தியாயிற்று. உடனே பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் மகிழும்படி மங்களாசாஸநம் நடந்தது. அந்த ப்ரக்ரியை பின் வருமாறு:- ராமாநுஜதயாபாத்ரம் என்று தனியன் தொடங்கப்பெற்று ... ப்ரணதோஸ்மி நித்யம் என்று பொதுத்தனியனும், பிறகு பக்தாம்ருதம் ... என்று தொடங்கி திருவாய்மொழியின் தனியன்கள் ஸேவிக்கப்பெற்று, ‘குன்றமேந்திக் குளிர்மழைகாத்தவன்’ ‘அகலகில்லேனிறையுமென்று’ ‘உலகமுண்ட பெருவாயா’ என்றும், தேசிகப்ரபந்தத்தில் ‘கண்ணனடியிணையெமக்குக் காட்டும் வெற்பு’ என்றும்பாசுரங்கள் ஸேவிக்கப்பட்டு ஸர்வதேசதசாகாலே ஷு என்று தொடங்கி, தூப்புல் வேதாந்த தேசிகனே! இன்னுமொரு நூற்றாண்டிரும் என்பது வரை தேசிகன் வாழித்திருநாமமும் ஸேவிக்கப்பட்டது. பின்பு அங்கிருந்து கருத்மானை மங்களாஸனம் பண்ணியதும், த்வஜஸ்தம்பத்தண்டையில் எழுந்தருளி, ஸ்தோத்ரபாடம் துடங்கி ந்யாஸதசகம் அநுஸந்திக்கப்பட்டது. தென்புற ப்ரதக்ஷிணம் எழுந்தருளியபோது மிகவும் ரமணீயமானதொரு ப்ரக்ரியை நடந்தது. அதாவது:- தேசிகபக்தர்கள் உரத்த குரலில், ‘स्वशङ्खचक्रलाञ्छनस्सदूर्ध्व......मालिकः’ என்று ஸேவிக்க, வாத்யகோஷம் அதை அப்படியே அநுகரித்தது. இப்மாதிரியே மற்ற பாதிச்லோகமும், ‘अनन्तसूरिसूनवे’ ‘गुरौ वादिहंसाम्बुदाचार्यशिष्ये’ ‘कवितार्किककलभव्रजकवलीकृतिसिंहे’ என்ற ச்லோகங்களும் பாதி பாதியாக வாத்யகோஷாநுவாதத்துடன் இரண்டு தரம் ஸேவிக்கப்பட்டன. பின்னர் இதர ஸந்நிதிகளிலும் தாயார்ஸந்நிதியிலும்மங்களாசாஸனமாகி மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு தன் ஸந்நிதிக்கு ஸ்ரீதேசிகன் எழுந்தருளும்போது வாயிலில் ஸ்ரீ வீரராகவப்பெருமானின் ப்ரஸாதமான மாலை, பரியட்டம், அபயஹஸ்தம் முதலானவற்றை ஸ்வீகரித்துக்கொண்டு ஆஸ்தானத்திற்கெழுந்தருளினார்.

இப்படிப்பட்டதான ஒரு மஹோத்ஸவத்தில் ஈடுபட்டு ஸேவிக்குமாறு அரிய ஸந்தர்ப்பம் அடியேனுக்கு இவ்வருட மேற்பட்டது அடியேன் பெற்ற பாக்யவிசேஷமேயன்றி வேறில்லை. ப்ரதி தினமும் சிறந்த பண்டிதர்கள் ஸ்வாமியின் விஷயமாய் உபந்யாஸங்களைச் செய்துவந்தனர். இவ் வைபவத்தை அதிக பக்தி ச்ரத்தைகளுடன், ஸ்ரீமான்கள், டில்லி பார்லிமெண்ட் உப அக்ராஸனர் அனந்தசயனமய்யங்கார் ஸ்வாமி, வெங்கடக்ருஷ்ணமாசார்யஸ்வாமி, தாமரைப்பூ, வேதாந்தாசார்யஸ்வாமி, பூதேரி, கல்யாணமய்யங்கார்ஸ்வாமி முதலிய ஆஸ்திகோத்தமர்கள் மிக சிறப்பாக நடத்தினது குறிப்பிடத் தக்கதாகும்.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

13–11–54 ராத்ரி குளித்தலையிலேயே ரங்கவிலாஸமென்னும் ஸ்ரீ ராஜகோபாலாசாரியர் க்ருஹத்திற்கு ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளினார். அவ்வூர் வாஸிகள் துலாமாதத்தில் 2 நாட்களே பாக்கியிருப்பதனால் காவேரிதீரமான இவ்விடத்திலேயே இரண்டு நாட்களும் எழுந்தருளியிருக்கவேண்டுமென்று மிகுந்த பக்தி ச்ரத்தையுடன் ப்ரார்த்தித்தார்கள். 14–11–54 ல் ஆராதித்து ராத்ரி டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார்கள். அவர்களது ப்ரார்த்தனையின்பேரில் அன்று மாலை 4 மணிக்கு 'தர்மம்' என்பது பற்றி ஸ்ரீ அழகியசிங்கர் உபந்யஸித்தாயிற்று. அன்றிரவு வக்கீல் ஸ்ரீ அண்ணாத்துரை ஐயங்கார் ப்ரார்த்தனையின்பேரில் அவர் க்ருஹத்திற்கு எழுந்தருளினார். 15–11–54 ல் அவரால் ஆராதிக்கப்பட்டு காவேரியில் துலாஸ்நானத்தையும் முடித்துக்கொண்டு அன்று ராத்ரி 14 மைலிலுள்ள மணவாசி, ஸ்ரீ ஸ்ரீநிவாஸ அய்யங்கார் பங்களாவிற்கெழுந்தருளினார். 16–11–54 ல் அவரால் ஆராதிக்கப்பட்டு அன்றிரவு அக்ரஹாரத்திலுள்ள அவர் தம்பிகள், ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார், ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் இவர்களுடைய க்ருஹத்திற்கெழுந்தருளினார். அவர்கள் 17-11-54 அன்று ஆராதித்தனர். அன்றிரவு புலியூருக்கு எழுந்தருளினார். அவ்வூர் வாஸிகளான ஸ்ரீ ராகவாசாரியர், ஸ்ரீ க்ருஷ்ணமாசாரியர் முதலியவர்கள் 18–11–54 ல் பெருமாளை ஆராதித்தார்கள். அன்றிரவு ஸ்ரீ ஸ்ரீநிவாஸ அய்யங்கார் டோலோத்ஸவம் நடத்தி வைத்தார். அங்கிருந்து அன்று ராத்ரியே கரூருக்கெழுந்தருளியாயிற்று. போகும் வழியில் மேலப்பாளையம் அக்ரஹாரத்துவழியாக அவ்வூர்வாஸிகள் புலியூருக்கே வந்து ப்ரார்த்தித்ததற்கு இணங்கி எழுந்தருளியாயிற்று. அக்ரஹாரவாஸிகள் வீதியை நன்றாக அலங்கரித்து மங்களஹாரத்தி எடுத்து உசிதமாக ஸம்பாவனையும் செய்தார்கள். கரூரில் ஸ்ரீக்ருஷ்ணமாசாரியர் பூர்ணகும்பத்துடன் வரவேற்று தன்னுடைய க்ருஹத்திற்குப் பெருமாளை எழுந்தருளப்பண்ணினார். 19–11–54 காலை மாலோலனுக்குத் திருமஞ்சனமும் ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவமும் அவரால் நடத்திவைக்கப்பட்டன. 20–11–54 முதல் 22–11–54 த்வாதசிவரையில் அவ்வூர் வாஸிகள் ஆராதித்தார்கள். 21–11–54 காலை புலியூர் ஆடிடர் திருமஞ்சனம் பண்ணிவைத்தார். அவ்வூர் சிஷ்யர்களின் ப்ரார்த்தனைக்கிணங்க 'தேசபக்தி' என்னும் விஷயம் ஸ்ரீ அழகியசிங்கரால் உபந்யஸிக்கப்பட்டது. 22–11–54 பகல் 3 மணிக்கு கரூரிலிருந்து கிளம்பி வாங்கலுக்கு எழுந்தருளியாயிற்று. அவ்வூர் வாஸிகளால் ப்ரதோஷாராதனமும் ராத்ரி ததீயாராதனமும் நடத்திவைக்கப்பட்டன. அங்கிருந்து அன்றிரவே புறப்பட்டு வேலூருக்கு எழுந்தருளினார். அவ்வூர் வாஸியான வக்கீல் ஸ்ரீ ராஜகோபால அய்யங்கார் 23-11-54 ல் தன்னுடைய க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார். அன்று ஸ்வாதி திருமஞ்சனம் கரூர் ஆடிடர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ அய்யங்காரால் நடத்திவைக்கப்பட்டது. திருமஞ்சனகாலத்தில் திருவாபரணங்களைச் சோதிக்கும்போது ஆராதகர் ஸ்ரீ ராஜகோபாலாசாரியர் திருமார்பு கல்லிழைத்த லக்ஷ்மீ பதக்கத்தின் பின்புறத்தில் தெலுங்கில் உள்ள எழுத்துக்களைப் பார்த்து 'பருத்திப்பட்டு ராகவாசாரியர் பார்யை கனகம்மாள் உபயம்' என்பதாக ஸ்பஷ்டமாக எழுதப்பட்டிருப்பதை ஸ்ரீ ஸன்னிதியில் விஜ்ஞாபித்தார். ஸ்ரீ கண்ணனுடைய தங்கடோலை கனகம்மாள் உபயம் என்று கேள்விப்பட்டு இருப்பதாகவும், ஸ்ரீ தேவப்பெருமாள், ஸ்ரீ ரங்கநாதன் இவர்களுக்குப் பதக்கங்கள் ஸமர்ப்பித்திருப்பதாகக் கேள்விப்பட்டிருப்பதாகவும் இதை நேரில் எழுத்தினால் தெரிந்துகொள்ளும்படி இருக்கிறது

விசேஷமென்றும், ஸ்ரீ ராகவன் த்வஜஸ்தம்பத்தில் எழுதப்பட்ட மாதிரியில் ஸங்க்ரஹமாய் எழுதப்பட்டுள்ளதென்றும், அந்த வம்சத்தின் முன்னோர்களுடைய பெயர் ஸ்ரீ சிங்கப்பிரானுக்கு என்றுப்ஸ்ருத்யமாயிருக்கிறதென்றும் ஸாதித்துவிட்டு 'பிதாமஹம்' என்னும் ரீதிப்படி அநுஸந்தித்தபடி. அன்று ராத்ரி அவ்வூர் மிராசுதார் ஸ்ரீ ஈச்வரய்யர் ஸ்ரீ சண்ணனுக்கு டோலோத்ஸவம் பண்ணிவைத்தார். அன்றிரவு அங்கிருந்து கிளம்பி குன்னத்தூர் எழுந்தருளினர். அங்கு ஸ்ரீ ரங்கஸ்வாமி அய்யங்காரின் ப்ரார்த்தனையின் பேரில் 24-11-54 காலை ஸ்ரீ மாலோலனுக்குத் திருமஞ்சனமும் ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவமும் விமரிசையாக நடந்தன. ஸ்ரீ அழகியசிங்கர் காலை அபிகமன ஆராதனமானதும் ஸ்ரீ ஸன்னிதிநிலத்தைக் கடாக்ஷித்தாயிற்று. அன்றிரவு 9 மணிக்குப்புறப்பட்டு 7 மைலுள்ள புதுப்பாளையத்திற்கெழுந்தருளினர். அவ்வூர் ஈயுண்ணிவம்சத்தைச் சேர்ந்த ஸ்ரீ ராகவ அய்யங்காரும் அவர்தம்பிகளும் காலை பெரியபெருமாளுக்குத் திருமஞ்சனமும் ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவமும் பண்ணி வைத்து ஆராதித்தார்கள். 25-11-54 ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு நாமக்கல்லுக்கு எழுந்தருளினர். அங்கு வக்கீல் ஸ்ரீ வீரராகவய்யங்கார் ஆராதித்தார். அவரது ஸம்பந்தி நல்லகவுண்டன்பாளையம் ஸ்ரீ க்ருஷ்ணமாசாரியர் திருமஞ்சனம் பண்ணிவைத்துத் தாயாருக்கும் ஆண்டாளுக்கும் காசுமாலை ஸமர்ப்பித்தார். அன்று ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கரின் திருநக்ஷத்திரத்தை முன்னிட்டு வேதப்ரபந்தக்ரந்தசதுஷ்டயபாராயணங்கள் உபக்ரமிக்கப்பட்டன. அங்கு சேலம் வக்கீல்களான ஸ்ரீ எஸ். விஜயராகவாசாரியர், ஸ்ரீ எம். எஸ். விஜயராகவாசாரியர், ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாசாரியர், ஸ்ரீ கோபாலாசார்யர் முதலியோர்கள் வந்து ஸ்ரீ அழகியசிங்கர் சேலத்திற்கெழுந்தருள வேணுமென்று ப்ரார்த்தித்தனர். நடுவில் தங்குவதற்கு ஆண்டலூர் கேட் ஸமீபத்தில் ஜவுளி, ஸ்ரீ ராஜகோபாலய்யங்கார் ஓரிடம் ஏற்பாடு பண்ணியிருப்பதாகவும் விஜ்ஞாபித்தார்கள். அதன்படியே அன்றிரவு புறப்பட்டு அவ்விடம் தங்கி 27௨ சனிக்கிழமை ராத்ரி சேலம் இரண்டாவது அக்ரஹாரத்திற்கு எழுந்தருளியாயிற்று. 28௨ ஞாயிற்றுக்கிழமை சேலத்திலுள்ளவர்கள் எல்லோரும் சேர்ந்து ஆராதித்தார்கள். இரண்டாவது அக்ரஹாரத்தில் வக்கீல் ஸ்ரீ வரதராஜ அய்யங்கார் க்ருஹத்தில் அன்று பெருமாள் எழுந்தருளியிருந்தார். வக்கீல் ஸ்ரீ அநந்தாசார்யருடையவும், அவர் மாப்பிள்ளை ஸ்ரீ கோபாலய்யங்காருடையவும் ப்ரார்த்தனையின் பேரில் அன்றிரவு கிளம்பி ஸ்ரீ கோபாலய்யங்கார் க்ருஹத்தில் பெருமாளும், ஸ்ரீ அநந்தாசார்யருடையக்ருஹத்தில் ஸ்ரீ அழகியசிங்கரும் எழுந்தருளியிருந்தார்கள். அன்று காலையிலேயே மதுரை, சென்னை, தேவக்கோட்டை, காரைக்குடி, மதுராந்தகம் முதலிய இடங்களிலிருந்து ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரத்தை உத்தேசித்து அநேகஸ்வாமிகள் வந்திருந்தார்கள். 29-12-54 திங்கட்கிழமை ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ர ததீயாராதனங்களையும் ராத்ரி டோலோத்ஸவத்தையும் சேலம் வாஸிகள் மிக பக்திச்ரத்தையுடன் நடத்தினர்கள். எல்லா சிஷ்யர்களும் ஸ்ரீ அழகியசிங்கருக்கு யதாசக்தி ஸம்பாவனையைச் செய்து ஸ்ரீபாததீர்த்தத்தை ஸ்வீகரித்துக் கொண்டார்கள். அன்றிரவு வக்கீல், ஸ்ரீ எம். எஸ். விஜயராகவாசாரியரின் ப்ரார்த்தனைக்கிணங்க அவரது க்ருஹத்திற்கெழுந்தருளியாயிற்று. மறுநாள் 30-11-54 செவ்வாய்க்கிழமை அவ்விடம் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கரின் திருநக்ஷத்ரம் ஸேவை சாற்றுமுறை ஸம்பாவனைகளுடனும் நடந்தது. ததீயாராதனமும் ராத்ரி டோலோத்ஸவமும் நன்றாக நடந்தன. பாராயணத்தில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கு யதோசிதம் ஸம்பாவனைகள் செய்யப்பட்டன. அன்றிரவு வக்கீல் ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாசாரியருடைய ப்ரார்த்தனையின்படி அவரது க்ருஹத்திற்கு எழுந்தருளினர். மறுநாள் 1-12-54 புதன்கிழமை அவ்விடத்தில் பெரியபெருமாள் திருமஞ்சனமும் கண்ணன்டோலோத்ஸவமும் கண்டருளினர்கள். அன்று ஸாயங்காலம் ஸகல சிஷ்யர்களுடையவும் ப்ரார்த்தனைக்கிணங்கி

ஸ்ரீ அழகியசிங்கர் ‘ப்ராசீன ஆசாரநியமங்களின் ஆவச்யகதை’ என்பதுபற்றி ஶாஸ்த்ரீயமாயும்லௌகிகமாயுமுள்ள மேற்கோள்களுடன் திருவாய்மலர்ந் தருளியாயிற்று. அன்றிரவு பாரஸ்ட் கன்ஸர்வேடர், ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ப்ரார்த்தனையின்மேல் பெருமாள் அவரது க்ருஹத்திற்கெழுந்தருளினர். அங்கு திருமஞ்சனம் பண்ணிவைத்து ஆராதித்து ராத்ரி டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார். 2-12-54 வியாழக்கிழமை ராத்ரி வக்கீல், ஸ்ரீ எஸ். விஜயராகவாசாரியர் ப்ரார்த்தனையின் பேரில் அவர் க்ருஹத்திற்கு எழுந்தருளினர். 3-12-54 வெள்ளிக்கிழமை பெரிய பெருமாளுக்குத் திருமஞ்ஜனமும் கண்ணனுக்கு டோலோத்ஸவமும் அவரால் நடத்தி வைக்கப்பட்டன. அவரது குமாரர்களெல்லோரும் ஸமாஶ்ரயணம் செய்துகொண்டனர். அன்றிரவு அங்கிருந்து ஆடிட்டர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸய்யங்கார் ப்ரார்த்தயின்பேரில் மேட்டுத்தெருவில் உள்ள அவர் க்ருஹத்திற்கு எழுந்தருளினர். 4-12-24 சனிக்கிழமையன்று அவ்விடத்தில் ஸ்ரீ பி. டி. ஸ்ரீநிவாஸய்யங்கார் பெருமாளுக்குத் திருமஞ்சனமும் கண்ணனுக்கு டோலோத்ஸவமும் கண்டருளப்பண்ணினர். 5-12-54 ஞாயிற்றுக்கிழமை அவ்விடத்திலேயே ஸங்கீத வித்வான், ஸ்ரீ செல்லமய்யங்காரால் திருமஞ்சனமும், மற்றொருவரால் ராத்ரி டோலோத்ஸவமும் பண்ணிவைக்கப்பட்டது. சேலத்தில் நடந்த டோலோத்ஸவங்களில் ஸ்ரீ செல்லமய்யங்காருர், ஸ்ரீ தேசிகனும் கீர்த்தனைகளைப் பாடி கண்ணனுக்குக் கைங்கர்யம் செய்து வந்தார்கள். அன்றிரவு சேலத்திலிருந்து புறப்பட்டு ஜவுளி, ஸ்ரீ ராஜகோபாலய்யங்கார் ப்ரார்த்தனைக்கிணங்கி பெருமாள் ஆண்டலூர் கேட்டிற்கெழுந்தருளினர். பின்பு திங்கட்கிழமை அவ்விடத்திலேயே நித்யததீயாராதநாதிகளைக் கண்டருளி ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு நாமக்கல் வக்கீல், ஸ்ரீ வீரராகவய்யங்கார் முதலியவர்களுடைய ப்ரார்த்தனையின்படி த்வாதசி ததீயாராதனத்திற்கு நாமக்கல்லுக்கு எழுந்தருளியாயிற்று. 7-12-54 செவ்வாய்க்கிழமை வக்கீல் ஸ்ரீவீரராகவய்யங்கார் க்ருஹத்திலெழுந்தருளியிருந்து கைசிகத்வாதசி ததீயாராதனம்கண்டருளியாயிற்று. ராத்ரிடோலோத்ஸவமும் அவர் பண்ணிவைத்தார். அவ்வூரில் வக்கீலாயிருந்த ஸ்ரீ வெங்கடாசாரியர் குமாரர் ஸ்ரீ ராமஸ்வாமி அய்யங்காரது ப்ரார்த்தனைக்கிணங்க அன்றிரவு அவரது க்ருஹத்திற்கு எழுந்தருளியாயிற்று. இங்கிருந்து முசிரி, அரசலூர், உத்தமர்கோயில் மார்க்கமாகத் தஞ்சாவூருக்கெழுந்தருளுகிறார்.

(தொடரும்)

செய்திகள் (தொடர்ச்சி)

ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம், பாதூர்.

ஜய௵ கார்த்திகை௴ 14௳ பூராடத்திருநன்னாளில் ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்காது திருநக்ஷத்ரமஹோத்ஸவம் மிக விமரிசையாக பாதூர் அக்ரஹாரத்தில் சிஷ்யகோடிகளால் கொண்டாடப்பட்டது. காலையில் பெருமாள் கோயிலிலிருந்து ஸ்ரீ அழகியசிங்கரின் திருவுருவப்படமும் பாதுகைகளும் நன்கலங்கரிக்கப்பட்டு வாத்யகோஷங்களுடனும் ஸ்வஸ்திவாசநபாராயணத்துடனும் முக்யவீதிகளில் எழுந்தருளப்பண்ணப்பட்டன. பின்பு ஸம்பாவனையும் தீர்த்தப்ரஸாதவிநியோகங்களும் விசேஷமாக நடந்தன. மாலை 3 மணிக்கு இங்கு ஸ்ரீ அழகியசிங்கரால் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வரும் கலாசாலைக்கு 42, 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்களுடைய திருவுருவப்படங்களை ஊர்வலமாக எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோகப்பட்டது. அப்போது நடந்த கூட்டத்தில் பாடசாலை உபாத்தியாயர்களும் மற்றும் பல பெரியோர்களும் ஸ்ரீ அழகியசிங்கரின் பெருமையையும் குணங்களையும் விரித்துரைத்தனர். பாடசாலைச் சிறுவர்கள் சிறு நாடகத்தொகுதிகளை நடித்து மகிழ்வித்தனர். பின்னர் பாடசாலையின் சார்பில் அனைவருக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு சந்தனதாம்பூலங்கள் வேதகோஷத்துடன் வழங்கப்பட்டு இம்மஹோத்ஸவம் இனிது முடிந்தது.

P. R. ஸ்ரீநிவாஸன்.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

ஜயஸூ மார்கழி — தை மீ 1954 - 1955 ஸூ டிஸம்பர் — ஜனவரி மீ

[தக்ஷிணாயனம்; ஹேமந்த ருது; சாப மீ]

16–12–54	1வ	வியாழக்கிழமை	ஷடசீதி, ஸங்க்ரமண தர்ப்பணம், சாப க்ருஷ்ணஸப்தமி திதி, திருப்பள்ளி [யெழுச்சி.
21–12–54	6வ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
22–12–54	7வ	புதன்கிழமை	விசாகம், 40-வதுபட்டம் ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திரு [நக்ஷத்ரம்.
24–12–54	9வ	வெள்ளிக்கிழமை	● அமாவாஸ்யை, கேட்டை, தொண்டரடிப்பொடியாழ்வார் — பெரியநம்பிகள் திருநக்ஷத்ரம்.
25–12–54	10வ	சனிக்கிழமை	ப்ரதமை திதி.
26–12–54	11வ	ஞாயிற்றுக்கிழமை	அதிதி.
27–12–54	12வ	திங்கட்கிழமை	த்விதியை திதி.
30–12–54	15வ	வியாழக்கிழமை	பஞ்சமி - ஷஷ்டி திதித்வயம்.
31–12–54	16வ	வெள்ளிக்கிழமை	ஸப்தமிதிதி, பூரட்டாதி, 41-வது பட்டம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹசடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
5—1–55	21வ	புதன்கிழமை	ஏகாதசி வ்ரதம். (வைகுண்ட ஏகாதசி)
8—1–55	24வ	சனிக்கிழமை	○ பூர்ணிமை.
11—1–55	27வ	செவ்வாய்க்கிழமை	த்ருதீயை திதி.
12—1–55	28வ	புதன்கிழமை	சதுர்த்தி திதி.
13—1–55	29வ	வியாழக்கிழமை	சாப க்ருஷ்ணபஞ்சமி திதி; போகிபண்டிகை.

[உத்தராயணம், ஹேமந்த ருது; மகர மீ]

14—1–55	தை மீ 1வ	வெள்ளிக்கிழமை	மகர ரவி 8-27; ஸங்க்ரமண தர்ப்பணம்; உத்தராயண புண்யகாலம்; ஸங்க்ராந்தி பண்டிகை; தநுர்பூஜா பூர்த்தி; சூன்ய திதி; 14-வது வார்ஷிக ஸ்ரீமாலோல வித்வத்ஸபை ஆரம்பம்.
19—1–55	6வ	புதன்கிழமை	ஏகாதசி திதி; திருவுள்ளூர் ஸ்ரீவீரராகவ ஸ்வாமிக்கு தை ப்ரஹ்மோத்ஸவாரம் [பம்.
20—1–55	7வ	வியாழக்கிழமை	த்வாதசி; ஹரிவாஸரம் 4-23.
21—1–55	8வ	வெள்ளிக்கிழமை	ஸ்ரீவீரராகவன் கருடோத்ஸவம்.
23—1–55	10வ	ஞாயிற்றுக்கிழமை	● அமாவாஸ்யை; உத்திராடம்; 42-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
25—1–55	12வ	செவ்வாய்க்கிழமை	ஸ்ரீவீரராகவன் திருத்தேர்.
30—1–55	17வ	ஞாயிற்றுக்கிழமை	ரதஸப்தமி.

Regd. No. M. 4437.

யுனைடெட் இந்தியா பிராவிடெண்ட் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

ஹெட் ஆபீஸ். "யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்", சென்னை-1

250, 500, 750, 1000 ரூபாய்கள் வரை

வைத்தியப் பரீக்ஷை இல்லாமலே

பாலிஸிகள் வழங்கப்படுகின்றன.

1000 ரூபாய்க்கு வருஷம் ஒன்றுக்கு போனஸ் ரூ. 9

* பிராவிடெண்ட் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளின் சரித்திரத்திலேயே தனிச்சிறப்பு வாய்ந்தது *

எங்கும் ஏஜண்டுகள் தேவை

எங்கள் ஏஜென்ஸி கௌரவம் வாய்ந்தது.

லாபகரமானது.

ஆர்வமுடைய இளைஞர்களுக்கு எதிர்காலத்தில் நல்ல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

விபரத்திற்கு அடியில் கண்ட விலாஸத்திற்கு எழுதுக:

காரியதரிசி,

யுனைடெட் இந்தியா பிராவிடெண்ட் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங், சென்னை-1

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt at Sri Malolapress, 30. Panagal Street, Tiruvellore.

Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobila-Mutt Sanskrit College, Madurantakam.